REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் -21 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :153 சித்திரை 13ஆம் நாள் சனிக்கிழமை 25 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## ஒரு வாரத்தில் 179 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஏப்.25
இலங்கையில் கடந்த 17ஆம் திகதியிலிருந்து நேற்று 24ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் மட்டும் 179 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி யுள்ளனர்.
தேசிய தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்த எண்ணிக்கை வெளியாகியுள்ளது.
அதற்கமைய கடந்த 17ஆம் திகதி 06 பேரும், 18ஆம் திகதி 10 பேரும், 19ஆம் திகதி 17 பேரும், 20ஆம் திகதி 33 பேரும், 21ஆம் திகதி 02

## மீண்டும் தொடர் ஊரடங்கு?

### சுகாதாரப்பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.25
கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. எனவே தொடர்ந்தும் மக்கள் செயற்பாடுகளில் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியுள்ளது. நிலைமைகள் மோசமாக இருந்தால் நாடளாவிய ரீதியிலான ஊரடங்கை மீண்டும் தொடர்ந்து அமுல்படுத்த 02

## கொரோனா தாண்டவம்

### மொத்தம் 417 நேற்று 49

கொழும்பு,ஏப்.25
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 49பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரைநாளிலும் நேற்றே ஒரே நாளில் அதிக கொரோனா நோயாளர்கள் இலங்கையில் பதிவாகியுள்ளனர்.
இதையடுத்து தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 368 இலிருந்து 417 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 02

# வெலிசறை முகாமுக்குள் கொரோனா ஓயாத அலை!

## இதுவரை 60 கடற்படையினர் பாதிப்பு

**கொழும்பு,ஏப்.25**
**வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றும் மேலும் 30 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**
**வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 60 சிப்பாய்கள் இதுவரை தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.** 02



## கொழும்பே முதலிடம்

### பண்டாரநாயக்க மாவத்தையில் மட்டும் 80 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஏப்.25
கொரோனா வைரஸால் கொழும்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 144 ஆக உயர்ந்துள்ளது.
இவர்களில் 80 பேர் கொழும்பு 12, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்தவர்களாவர். 02

## மற்றொரு ஈழத் தமிழர் கொரோனாவால் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 25
கொரோனா தொற்றுக் காரணமாக இலங்கைத் தமிழர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த அவர் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

## கொரோனா அச்சம்: கடற்படையினரின் 4,000 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்!

கொழும்பு, ஏப். 25
இலங்கையின் பிரதான கடற்படை முகாம்களில் ஒன்றான வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றும் 60 சிப்பாய்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அந்த முகாமைச் சேர்ந்த கடற்படையினரோடு தொடர்புடைய 4 ஆயிரம் குடும்பங்களும் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 02

## தனிமைப்படுத்தப்பட்டவர் யாழ்.போதனாவில் சாவு!

### கொரோனா காரணமில்லை

யாழ்ப்பாணம், ஏப். 25
கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையிலிருந்து தனிமைப்படுத்தலுக்காக யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் 2A

## யாழில் பாண் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம்

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணத்தில் பாண் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி 2A

## கொரோனா பெண்ணுக்கு பிறந்த குழந்தை சாவு!

கொழும்பு,ஏப்.25
கொரோனா வைரஸால் பீடிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை உயிரிழந்த சம்பவம் நேற்று மாலை கொழும்பில் இடம்பெற்றுள்ளது.
மருதானையைச் சேர்ந்த குறித்த பெண், பிரசவத்துக்காக கொழும்பு டி சொய்ஷா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கொரோனாத் 02

## கே.கே.எஸ்ஸில் உள்ளோருக்கு மீண்டும் கொரோனா சோதனை

யாழ்ப்பாணம், ஏப். 25
சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 4 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டாலும் அவர்களுக்கு மீண்டும் சோதனை முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 02

## யாழ்ப்பாணத்தில் மஞ்சள் இல்லை!

யாழ்ப்பாணம், ஏப்ரல். 25
கொழும்புச் சந்தையில் 2ஆயிரத்து 500 ரூபாவுக்கே மஞ்சள் விற்பனை செய்யப்படுகின்றது. அதன் காரணமாக மஞ்சள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுவதில்லை என்று நகர வர்த்தகர்கள் தெரி விக்கின்றனர். 02

## ஒரு வாரத்தில்...

06 பேரும், 22ஆம் திகதி 20 பேரும், 23ஆம் திகதி 38 பேரும், 24ஆம் திகதி 49 பேரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஊரடங்குச்சட்டம்நீக்கப்பட்டபின்னரேகொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நேற்றே ஒரே நாளில் அதிகளவு நோயாளிகள் (49 பேர்) இனங்காணப்பட்டுள்ளனர். (அ-22,44)

## மீண்டும்....

நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில், சுகாதாரப் பணிப்பகம் மற்றும் அரசாங்கம் அவதானித்துள்ள விடயங்கள் மற்றும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ள தீர்மானங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் இலங்கையில் இன்னமும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. இன்னமும் நோயாளர்களை அடையாளம் கண்டவண்ணமே உள்ளோம். அவ்வாறு இருக்கையில் நாட்டை வழமையான நடைமுறைக்கு அனுமதிக்க முடியாது. தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நீண்டகால சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாக வேண்டும்.

ஆகவே மக்கள் இப்போது எவ்வாறான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுகின்றீர்களோ அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்தாக வேண்டும். நாடு வழமைக்குத் திரும்ப மேலும் சில காலம் தேவைப்படும். கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த மேலும் சில காலத்துக்கு கட்டுப்பாடுகளை விதித்தாக வேண்டும்.

பொதுப்போக்குவரத்து, தொழில் நிலையங்கள், வீதிகள், பொதுச் சந்தைகள் என எங்கும் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியாக வேண்டும். அதேபோன்று சிகை அலங்கார நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட வேண்டும், முச்சக்கரவண்டிகளில் பயணிகள் இருவர் மாத்திரமே பயணிக்க முடியும், பொதுப் போக்குவரத்துக ளில் பயணிக்கையில் இடைவெளிகளைப் பேண வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

மிக முக்கியமாக நாட்டில் தற்போது ஊரடங்கு சட்டம் தற்காலிகமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் ஒருவார காலம் நிலைமைகள் எவ்வாறானது என்பதை அவதானித்து மக்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும், சுகாதார பணிப்புரைகளைப் பின்பற்றுகின்றனரா என்பது குறித்து அவதானம் செலுத்தி, அதன்போது நிலைமைகள் மோச மாக இருந்தால் நாடளாவிய ரீதியிலான ஊரடங்கை மீண்டும் தொடர்ந்து அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கொரோனா வைரஸ் தொடர்பில் அவதான செயலணியுடன் விசேட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஊரடங்குச் சட்டத்தை தளர்த்த அரசாங்கம் சில மாற்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கு சுகாதார வேலைத்திட்டம் குறித்து எமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றோம்.

எனினும் நாட்டின் நிலைமைகளைத் தொடர்ச்சியாக கண்காணித்து உடனடியாக மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரலாம் அதற்கேற்றால்போலும், மாற்று நடவடிக்கைத் திட்டங்கள் உள்ளன. என்றார். (சு-25)

## கொரோனா....

நேற்றுப் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 49 பேரில் 30 பேர் வெலிசறை கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்றும், 12 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

மேலும் 5 பேர் விடுமுறைக்காக வீடு திரும்பிய கடற்படைச் சிப்பாய்கள் எனவும் அவர் கூறினார். இவர்களில் இருவர் குருநாகல் மாவட்டத்தையும், மற்றவர்கள் இரத்தினபுரி, பதுளை மற்றும் கண்டி மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன் கொழும்பு டி சொய்ஷா வைத்தியசாலையில் குழந்தை பிரசவிப்பு தற்காகச் சேர்க்கப்பட்டிருந்த மருதானையைச் சேர்ந்த பெண் ஒருவரும், மேலும் ஒருவரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 417 பேரில் தற்போது 301 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 109 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் 07 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 183 பேர் வைத்தியசாலைகளில் கொரோனா தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-22)

## கொரோனா...

தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

எனினும், குறித்த பெண்ணுக்கு நேற்று மாலை பிறந்த குழந்தை உயிரிழந்துவிட்டது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். (அ-22)

## கே.கே.எஸ்ஸில்....

அரியாலையில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருடன் தொடர்பைப் பேணிய 20 பேர் காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஏப்ரல் மாதம் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் கொரோனா தொற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. 6பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர்கள் வெலிகந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எஞ்சிய 14 பேருக்கும் ஏப்ரல் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 10 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதேவேளை இறுதியாக எஞ்சியிருந்த 4பேருக்கும் நேற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவுகள் வெளியாகின.

'கொரோனா தொற்று இருந்தவர்கள் கடந்த 15ஆம் திகதியே அங்கு அவதானிக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து மூன்று வாரங்கள் முடிந்த பின்னரே எஞ்சியவர்களின் தனிமைப்படுத்தல் காலம் முடிவடையும். தனிமைப்படுத்தல் காலம் முடிவடையும்போதும் அவர்களுக்கு மீண்டும் சோதனை நடத்தப்படும். அப்போதும் கொரோனா தொற்று இல்லை என்றால் மாத்திரமே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்' என்றார் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன். (ஓ,5)

## வெலிசறை...

இலங்கையின் பிரதான கடற்படை முகாம்களில் ஒன்றான வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் விடுமுறையில் பொலநறுவையிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் கொரோனாத் தொற்றுடன் அங்குள்ள வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை அடையாளம் காணப்பட்டார். மறுநாள் வியாழக்கிழமை காலை குறித்த முகாமைச் சேர்ந்த மேலும் ஒரு சிப்பாய் குருநாகல் வைத்தியசாலையில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

அதையடுத்து கடற்படை முகாமில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பகல் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் 28 சிப்பாய்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியானது. அதன்பின்னர் நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து வெலிக்கடை கடற்படை முகாம் முற்றாக முடக்கப்பட்டது. அங்கிருந்தவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தநிலையில் கடற்படை முகாமில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் 30 சிப்பாய்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனக் கண்டறியப்பட்டது.

அங்கு தொடர் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன. அதேவேளை, முகாமில் இருந்து விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றவர்களையும் பரிசோதனைகளுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு முகாமில் மட்டும் 60 சிப்பாய்கள் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளமை இலங்கையின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புத்துறையினரையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இதேவேளை, "ஜா எல, சுதுவெல்ல பிரதேசத்தில் ஏற்கனவே கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களைத் தேடிப் பிடித்து அவர்களை அம்பாறை ஒலுவில் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இதன்போதே இந்தச் சிப்பாய்களுக்குக் கொரோனா தொற்றுப் பரவியுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது" என்று இராணுவத் தளபதி நேற்றுமுன்தினம் இரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-22,44)

## யாழ்ப்பாணத்தில்...

இலங்கை அரசு மஞ்சளுக்கு கட்டுப்பாட்டு விலையை அறிவித்துள்ளது. 750 ரூபாவுக்கே விற்பனை செய்ய முடியும் என்று வர்த்தமானி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசு மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கும் வரையில் 650 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டு வந்தது. இறக்குமதிக்கு தடை விதித்த பின்னர் விலை அதிகரித்தது. அதற்கிடையில் கொரோனாகட்டுப்பாட்டுக்குமஞ்சள்கரைத்து தெளித்தால் நல்லது என்ற ஆயுள்வேத அறிவுரையை அடுத்து மஞ்சளுக்கான கேள்வி அதிகரிக்க அது 2ஆயிரம் ரூபா தொடக்கம் 2 ஆயிரத்து 500 ரூபா வரைக்கு விற்பனை செய்யப்பட்டது.

கொழும்புச் சந்தையில் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் அதனை யாழ்ப்பாண வர்த்தகர்கள் கொள்வனவு செய்வதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இறக்குமதிக்கான கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து மஞ்சளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். மஞ்சள் போதியளவு இறக்குமதி செய்யப்பட்டால் 750ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தில் அதனை விற்பனை செய்ய முடியும் என்று நகர வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ஓ,5)

## மற்றொரு...

யாழ்ப்பாணம் கீரிமலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசிப்பவருமான குணபாலசிங்கம் விஜயலட்சுமி (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி 20நாள்களுக்கு மேலாக சிகிச்சை பெற்று வந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-114)

## கொழும்பே...

இந்தியாவுக்குச் சென்றுவந்த பெண்ணொருவர் பண்டாரநாயக்க மாவத்தையில் கடந்த 15ஆம் திகதி கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அதையடுத்து அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் எனப் பலர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். குறித்த பிரதேசம் முற்றாக முடக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள்தான் தற்போது தொற்றுக்குள்ளாகி வருகின்றனர்.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 58 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 33 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 08 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 06 பேரும், குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் தலா 04 பேர் வீதமும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மாத்தறை, அம்பாறை, பதுளை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு வவுனியா மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெலிசறை கடற்படை முகாமில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தவர்களில் 58 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-22)

## கடற்படையினரின்...

அதேபோல் வெலிசறை கடற்படை முகாமுக்குள் இருக்கும் 150 விடுதிகளில் உள்ளோரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, கடற்படைச் சிப்பாய்களுக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை குறித்து யாரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்தார். (ம-22)

## தென்னிலங்கையிலிருந்து கிளிநொச்சிக்கு

# தொழில் நிமித்தம் வந்தோர் தனிமைப்படுத்தலிருந்து விடுவிப்பு

கிளிநொச்சி, ஏப். 25

தென்னிலங்கையிலிருந்து வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக கிளிநொச்சிக்கு வந்த 16பேரும், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருந்த நிலையில் கொழும்பு சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காலி, கம்பஹா, குருநாகல் மற்றும் அநுராதபுரத்திலிருந்து 16 கட்டுமானப் பணியாளர்கள் நேற்று முன்தினம் ஓர் ஒப்பந்த நிறுவனத்தால் கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

உரிய அனுமதிகளைப் பெற்றே கிளிநொச்சிக்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்த பணியாளர்கள், தம்மைசுயதனிமைப்படுத்தியமை தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவித்தனர். கொழும்பு சுகாதார அமைச்சால், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த முடியாது என்றும் தனிமைப்படுத்திய பிரதேசத்திலிருந்து வந்தால் மாத்திரமே தனிமைப்படுத்த முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதத்தை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு, கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் பணிப்புக்கு அமைவாக அவர்கள் 16 பேரும் சுயதனிமைப்படுத்தலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர். (ஒ,5,105)

# ‘பைக்கற் கசிப்பு’ பொலிஸ் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

உடலுக்குத் தீங்கான கசிப்பை விற்பனைக்காக பைக்கற்றுக்களில் அடைத்து கொண்டு சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராயில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் அவர்களைச் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து சிறிய சிறிய பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டு சுமார் 6 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-111)

# பெறுபேறுகள் அடுத்த வாரம்

கொழும்பு,ஏப்.25

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இம்மாதம் இறுதியில் வெளியிட எதிர்பார்த்திருப்பதாக பரீட்சைகள் திணைக்களப் பிரதி ஆணையாளர் நாயகம் பிரணவதாசன் தெரிவித்தார்.

நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# காணாமல் போனவர் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப்.26

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினரான இ.செந்தூரன் நேற்றுக் காணாமல் போயிருந்த நிலையில் இன்று அதிகாலை சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று, கைபேசி, பேர்ஸ் என்பன தொண்டைமானாறு மயிலதனை இந்து மயானத்துக்கு அருகே நேற்றிரவு அநாதரவான நிலையில் காணப்பட்டன. அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இது தொடர்பாக வல்வெல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அவை கோப்பாயைச் சேர்ந்த இலங்காதரன் செந்தூரன் (வயது37) என்வருடையது என்று பொலிஸார் உறுதி செய்தனர். இவர் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினராவார்.

மீட்கப்பட்ட பொருள்கள் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டன. செந்தூரனின் உறவினர்களுக்குப் பொலிஸாரால் தகவல் வழங்கப்பட்டது. அதையடுத்து அவரது உறவினர்கள் அந்தப் பகுதியில் தேடுதல் மேற்கொண்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்ட இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் நீருக்குள் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)

# பக்கத்து வீடுகளில் களவாடியவர் கைது!

*சுண்டுக்குழியில் 9 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் மீட்பு*

யாழ்ப்பாணம், ஏப். 25

அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளின் குடியுரிமைபெற்ற யாழ்ப்பாணத்தவர்களின் இரு வீடுகள் உடைக்கப்பட்டு இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் அந்த வீடுகளுக்கு அருகிலுள்ளவர் கைது செய்யப்பட்டதோடு, திருடப்பட்ட பொருள்களும் அவருடைய வீட்டிலிருந்து மீட்கப்பட்டன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

9 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று வீட்டிலிப்ருப்போர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்குப் பின்புறமாகவுள்ள வீதியிலுள்ள இரண்டு வீடுகளிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது. அந்த வீடுகளின் உரிமையாளர்களான இருவரும் கனடா மற்றும் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள்.

ஆண்டு தோறும் வருகை தந்து அந்த வீடுகளில் தங்கியிருந்துவிட்டு குடியுரிமை நாட்டுக்குத் திரும்பி விடுவர். இந்தமுறையும் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கியிருந்துவிட்டு கடந்த மார்ச் மாதம் கொழும்புக்கும் திரும்பியிருந்தனர்.

அவர்களுடைய வீடுகளைப் பராமரிப்பதற்கு ஒருவர் பொறுப்பளிக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அங்கு சென்றபோது, இரண்டு வீடுகளும் உடைக்கப்பட்டிருந்தமையை அவதானித்தார். வீட்டினுள் சென்றுபார்த்தபோது பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டிருந்தமையைக் கண்டு அதிர்ந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது பற்றி வீடுகளின் உரிமையாளர்களுக்கு அறிவித்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாண பெரும் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவிலும் வீடுகளின் பராமரிப்பாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைகளை துரிதப்படுத்திய பொலிஸார், திருட்டு இடம்பெற்ற வீடுகளுக்கு மிக அண்மையாக உள்ள வீட்டு உரிமையாளரைச் சந்தேகத்தில் விசாரித்தனர். அவருடைய கதையில் சந்தேகம் கொண்ட பொலிஸார் அவருடைய வீட்டில் தேடுதல் நடத்திய போதே முன்னர் இரண்டு வீடுகளிலும் திருடப்பட்டிருந்த பொருள்கள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தமையை தேடிக் கண்டறிந்து மீட்டனர். சந்தேகநபரான அந்த வீட்டு க்காரரையும் கைதுசெய்தனர்.

யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி முனசிங்க தலைமையில் இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார். விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்த ப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-37,111)



## *தனிமைப்படுத்தப்பட்டவர்...*

போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தாழ் குருதி அமுக்கத்தால் உயிரிழந்துள்ளதாக மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கொழும்பைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேர் வரையில் வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். கொடிகாமத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 62 வயதான நசார் என்பவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 22ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

அவருக்கு கொரோனா தொற்றுக்கான சோதனை நேற்று முன் தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும் நேற்று முன் தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

‘அவருக்கு ஏற்கனவே இருதய நோய் இருந்தது. தாழ் குருதி அமுக்கம் காரணமாக உயிரிழந்துள்ளார். அவருக்கும் அவரது இரு மகன்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்றுச் சோதனையில் கொரோனா இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது’ என்றார் மருத்துமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி. (ஒ,5,20,111)

## *யாழில்...*

உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில், இறக்குமதி செய்யப்படும் மாவின் விலை அதிகரித்துள்ளமையாலும் பாண் உற்பத்திக்குத் தேவையான உப மூலப் பொருள்கள் அனைத்தின் விலைகளும் சடுதியாக அதிகரித்தமையாலும் பாண் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன, என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

# கொரோனா மருத்துவமனை வடக்கில் அமைக்கப்படும்!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 25**
**கொரோனா தொற்றாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு வடக்கு மாகாணத்தில் விசேட மருத்துவமனை அடையாளப்படுத்தப்பட்டு அங்கு வைத்து சிகிச்சையளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்று வரையான காலப் பகுதியில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்படுகின்றவர்களை வேறு மருத்துவமனைகளுக்கு அனுப்பியிருந்தோம். குறிப்பாகத் தொற்று நோய் மருத்துவமனை, வெலிகந்த, இரணவில ஆகியவற்றுக்கு அனுப்பியிருந்தோம்.
ஆனால் எதிர்வரும் சில நாள்களில் வடக்கு மாகாணத்தில் விசேட மருத்துவமனை அடையாளப்படுத்தப்பட்டு அங்கு தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதற்கான நடவடிக்கைகளை மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேற்கொண்டு வருகின்றார். அவர்களுக்கான ஆலோசனைகள் உள்ளிட்ட உதவிகளை நாம் தொடர்ந்தும் வழங்குவோம் என்றார். (ஓ,5)

## பொலிஸார் மீது வீழ்ந்த மரக்கிளை!



யாழ்ப்பாணம், ஏப். 25
வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் வீதியோர மரமொன்றின் கிளை திடீரென்று முறிந்து வீழ்ந்ததில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பொலிஸ் அலுவலர்கள் இருவர் அதில் அகப்பட்டு காயமடைந்தனர். இருவரும் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் எரிபொருள் நிரப்ப சென்று கொண்டிருந்தபோதே மரக்கிளை முறிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
அவர்கள் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன. போக்குவரத்தும் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

## மத்திய ஆளுநரின் அலுவலகம் பூட்டு

கொழும்பு,ஏப்.25
மத்திய மாகாண ஆளுநரின் அலுவலகத்தில், சேவகர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான கடற்படைச் சிப்பாயுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தமை தெரியவந்ததை அடுத்து, அலுவலகம் தற்காலிகமாகமூடப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்ததாவது,
கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள வெலிசறை கடற்படை முகாமில் இருந்த சிப்பாயுடன், அலுவலகத்தில் சேவை செய்யும் நபர் ஒருவர் தொடர்பு வைத்திருந்தமை தெரியவந்தது.
அதனையடுத்து பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அலுவலகத்தைத் தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்தோம்.
குறித்த நபர் கடற்படையினரின் மோட்டார் சைக்கிளை திருத்திக் கொடுக்க உதவி செய்துள்ளார். சேவகருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை. இருந்தபோதும் ஊழியர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக ஆளுநர் அலுவலகத்தை மூடத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றார். (க)

## படையினர் மூலமாக வடக்கே கொரோனா?

### இது அரசின் சதி வேலையா? கேள்வியெழுப்புகின்றார் சாள்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 25
அதிகமான கொரோனா சந்தேக நபர்களை வடக்கிலுள்ள படை முகாம்களில் தனிமைப்படுத்தலுக்காக அனுப்புவதன் மூலமாக, வடக்கில் உள்ள படையினருக்கும் அவர்கள் மூலமாக வடக்கு மக்களுக்கும் கொரோனா பரப்ப அரசு சதி வேலை செய்கிறதா?
இவ்வாறு கேள்வி எழுப்புகின்றார், தமிழ் அரசுக் கட்சியின் மன் னார் மாவட்டக் கிளைத் தலைவர் இ. சாள்ஸ் நிர்மலநாதன்.
“கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையிலிருந்து ஆயிரம்பேர் கொரோனா தடுப்பு மைய ங்கள் என்ற பெயரில் வடக்கிலுள்ள படை முகாம்க ளில் தங்க வைக்கப்படுகின்றனர். அந்த முகாம்களில் உள்ள படையினரோ வெளியில் மக்கள் மத்தியில் உலாவுகின்றனர். பசறையில் தடுப்பு நிலையத்தில் இருந்த ஒரு கடற்படைச் சிப்பாய்க்கு கொரோனாதொற்றியதன் மூலம் 60 க்கும் மேற்பட்ட சிப்பாய்களுக்கும்பரவியுள்ளதனை அரசே அறிவித்துள்ளது.
முல்லைத்தீவு கேப்பாபிலவு கொரோனா தடுப்பு மையத்திலிருந்து மூவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்ப டுகின்றது. அவ்வாறு தப்பிச் சென்றவர்கள் எத்தனை இடங்களுக்கு, எத்தனை வாகனங்களில் பயணிக்கின்றனரோ தெரி யாது.
இதனால்தான் அந்த அந்த மாவட்டத்திலேயே அல்லது அருகில் தடுத்து வைத்திருப்பின் தப்பிச் சென்றாலும் குறுகிய பிரதேச த்துக்குள்ளேயே ஊடுருவச் சந்தர்ப்பம் உண்டு.
எனவே வடக்கு மக்களின் சுகாதார நலன்பேணாது அரசு செயற்படும் நிலையில் அரசுடன் ஒட்டியிருக்கும் அரசியல்வாதிகள் அரசுக்குத் துணைபோவதும் ஏழை மக்களுக்குக் கிடைக்கும் நிவாரணத்தை தாம் வழங்குவதாகக் காண்பிக்கும் வங்குரோத்து அரசியலிலும் ஈடுபடுகின்றனர். என்றார். (த-105)

## மே 19 போர் வெற்றி நாள்

### கொரோனா அச்சத்திலும் இனவாதத் தீ

### மீண்டும் முருங்கைமரத்தில் கோத்தா அரசு

கொழும்பு, ஏப். 25
தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட மே 19 ஆம் திகதியை ‘போர் வெற்றி’ நாளாக மீண்டும் அறிவிப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ ஆட்சியில், போர் வெற்றிநாளாக மே மாதம் 19 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டுவந்ததுடன், அந்தநாளில் இராணுவ அணிவகுப்பு மரியாதை உட்பட பல நிகழ்வுகள் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தப்பட்டுவந்தன.
எனினும், 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதன் பின்னர் மே 19 ஆம் திகதியை பிரிவினைவாதம் தோற்கடிக்கப்பட்ட தினமாக கொண்டாடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்ததுடன், இராணுவ அணிவகுப்பு உள்ளிட்ட பிரமாண்ட நிகழ்வுகளை நிறுத்தியிருந்தது.
இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த மஹிந்த தரப்பு, மே 19 ஆம் திகதிகளில் போர் வெற்றி நாளை நினைவுகூரும்வகையில் நிகழ்வுகளை நடத்திவந்தன.
தற்போது ராஜபக் ஷக்களின் ஆட்சி நிலவும் சூழ்நிலையிலேயே மீண்டும் போர் வெற்றி நாளை அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இந்தமுறை மிகவும் எளிமையான முறையிலேயே அந்தநாள் நினைவுகூரப்படும் என்றும் அறியமுடிகின்றது. (த-44)

## மருத்துவ நிபுணரின் மறைவுக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவ நிபுணர் செங்கமலம் தெய்வேந்திரன் அவர்களின் மறைவு எமக்கு மிக மன வருத்தத்தை அளிப்பதாகவும், அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாகவும், இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் மிகவும் கடினமான காலங்களில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் நன்கு அறியப்பட்ட மயக்க மருந்து நிபுணராக செங்கமலம் தெய்வேந்திரன் இருந்தார். இந்தக் கடினமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம், என்று குறிப்பிட்டுள்ளனர். (ஓ,5)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

அநுராதபுரம்,ஏப்.25
அநுராதபுரம் கடதிஹ பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. இதன்போது சந்தேக நபர் 34 பொதிகளுக்குள் மறைத்து வைத்திருந்த 18 கிராம் 351 மில்லி கிராம் ஹெரோயினையும் , தொலைபேசி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 3 மாதங்களுக்குத் தேர்தல் என்ற பேச்சே வேண்டாம்!

## சஜித் வலியுறுத்து



**கொழும்பு, ஏப். 25**

**இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் நாட்டின் இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவது குறித்து சிந்திக்கவே முடியாது. எனவே, குறைந்தது மூன்று மாதங்களுக்காவது தேர்தல் பற்றி எவரும் வாய் திறக்காமல் இருப்பதே நல்லது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தல் பற்றி இப்போதைக்கு அவசரப்பட வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நாம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும், ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜுன் மாதம் 20ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

ஆனாலும், கொரோனா வைரஸின் பாதிப்பு தொடர்ந்தால் அன்றைய தினமும் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பின்னர் அறிவித்துள்ளார்.

எனவே, குறைந்தது மூன்று மாதங்களுக்காவது தேர்தல் பற்றி எவரும் வாய் திறக்காமல் இருப்பதே நல்லது. முதலில் கொரோனா என்ற கொடியஅரக்கனை இந்த நாட்டிலிருந்து நாம் இல்லாதொழிக்க வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தல் பற்றி சிந்திக்க வேண்டும் - என்றார். (ஒ,5,22)



# மருத்துவமனையில் திடீர் தீப்பரவல்

மன்னார்,ஏப்.25

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தனியார் வைத்தியசாலையில் நேற்றுத் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது. வைத்தியசாலையில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக தீப்பரவல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவான மருத்துவ உபகரணங்கள், மருத்துவக் கருவிகள், மருந்துகள் உட்பட 35 லட்சத்துக்கும் அதிகளவான பெறுமதியுடைய சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளன. மன்னார் நகரசபையினர், இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் மற்றும் பொது மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. நகரசபை மற்றும் பொலிஸாரின் நீர் கொண்டு செல்லும் வாகனங்களைப் பயன்படுத்தியே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-213)

# இரத்ததான முகாம்

சுழிபுரம்,ஏப்.25

சுழிபுரம் றோட்டறிக் கழகமும், சுழிபுரம் மேற்கு பாரதி கலாமன்றமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பாரதி கலாமன்றத்தில் நடைபெறும்.

குறித்த பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் இரத்த தான முகாமில் பங்குபற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-114)

## பேலியகொடை மீன் சந்தை:

# 529 பேரில் எவருக்கும் கொரோனா இல்லை!

கொழும்பு, ஏப். 25

பேலியகொடை மீன் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எவருக்கும் கொரோனா வைரஸ் இருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

பேலியகொடை மீன் சந்தையில் 529 பேரிடம் எடுக்கப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். பேலியகொடை மீன் சந்தைக்கு வரும், பிலியந்தலையைச் சேர்ந்த மீன் வர்த்தகர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, பேலியகொடை மீன் சந்தை மூடப்பட்டதோடு அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மீன் வர்த்தகர்கள் 529 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-22)

## கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து

# 3பேர் தப்பிப்பு?

## இராணுவத் தளபதி மறுப்பு

முல்லைத்தீவு, ஏப். 25

கொழும்பிலிருந்து தனிமைப்படுத்தலுக்காக முல்லைத்தீவு கேப்பாப்பிலவு தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்து வரப்பட்டவர்களில் மூவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் தமக்கு அவ்வாறானதொரு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ் பேச்சாளர் ஆகியோர் மறுத்துள்ளனர். (ஒ,5,22,105)

## கொரோனா பரவல்

# அச்சம் வேண்டாம் என்கின்றது அரசு!

கொழும்பு, ஏப். 25

'பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வெலிசறை கடற்படை முகாம் ஆகியவற்றிலிருந்து அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும் மக்கள் பதற்றமடைய வேண்டாம்' இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக கொரோனா தொற்று நோயாளர்களை அதிக அளவில் அடையாளம்காண முடிந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஆரம்ப கட்டத்தில் மிகவும் குறைந்தளவான பி.சி.ஆர். சோதனைகளே மேற்கொள்ளப்பட்டன. கடந்த வாரமளவில் அது 531ஆக அதிகரிக்கப்பட்டதோடு, இவ்வாரம் அதனை 730ஆக அதிகரித்தோம். நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பி.சி.ஆர் பரிசோதனை கூடங்களையும் இணைத்து விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்கின்றோம். ஒரு சில ஆய்வுக்கூடங்களில் பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்களை மேலும் அதிகரிப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய, சுகாதார அமைச்சால் தேசிய ரீதியில் வழங்கப்படும் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கு அவர்களின் உதவியைப் பெறுவதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் இலங்கையில் மிக உயர்ந்த அளவில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வற்கான நோக்கமாகும்' - என்றார். (ம-22)

## வெலிசறை கொரோனாவையடுத்து

# அம்பாறை, உஹண, தமண முடங்கின

கொழும்பு, ஏப். 25

அம்பாறை, உஹண, தமண பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. நேற்று முன் தினம் இரவு குறித்த பகுதிகளில் தற்காலிகமாக பொலிஸ் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை அது நீக்கப்பட்டுள்ளது.

வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றும் பல கடற்படை வீரர்கள் விடுமுறையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அம்பாறை நகர், உஹண, தமண ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ள நிலையில், குறித்த பொலிஸ் பிரிவுகளுக்குள் நுழைவது மற்றும் வெளியேறுவதும் தடை செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனரத்ன தெரிவித்திருந்தார்.

வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிய பல கடற்படை சிப்பாய்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியமை உறுதிப்பட்டிருந்ததையடுத்து, குறித்த முகாமிலுள்ள அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முன் தினம் தெரிவித்திருந்தார். அதற்கமைய, அங்கிருந்து விடுமுறையில் சென்ற அனைவரையும் மீள அழைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-22)

# சண்டித்தனம் காட்டினாலும் சபை இனிக் கூட முடியாது!

## ஜனாதிபதி திட்டவட்டம் அமைச்சரவைக்கும் அறிவித்தாராம்



**கொழும்பு, ஏப். 25**
**“கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டப்போவ தில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷ அமைச்சரவை யிலும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். எனவே, சண்டித்தனம் காட்டி எவராலும் நாடாளுமன்றத்தைக் கூட்டவே முடியாது.” என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம்முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடை பெற்றது.
இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியவை வரு மாறு,
“1989 ஆம் ஆண்டுமுதல் இற்றை வரை நான் நாடாளுமன்ற உறுப் பினராகச் செயற்பட்டுவருகின் றேன். அரசமைப்பின் 148 ஆம் சரத்தின் பிரகாரம் நிதி அதிகாரம் என்பது நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. எனினும், சபை கலைக்கப்பட்ட பின்னர், நிதி அதிகா ரம் ஜனாதிபதி வசமாகின்றது.
அதேபோல் கலைக்கப்பட்ட நாடா ளுமன்றத்தை மீண்டும் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே இருக்கின்றது. அவசரகால நிலையை அறிவித்தால், அவசரகா லச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள் ளுதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவே இவ்வாறு கூட்ட முடியும்.
ஆனால், அதற்கான தேவைப்பாடு எழவில்லை. எனவே, நாடாளுமன் றத்தை மீண்டும் கூட்டமாட்டேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இது பற்றி அமைச்சரவையிலும் தெளிவுபடுத்தினார். எனவே, வலுக் கட்டயமாக சண்டித்தனம்காட்டி எவராலும் நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியாது.
அரசமைப்பின் பிரகாரம் நான்கரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே சட்டபூர்வமாக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தார். அவருக்கே மக்களும் ஆணை வழங்கியுள் ளனர்.
அத்துடன், இது விடயத்தில் அரச மைப்புத் தொடர்பான தெளிவூட்டல் நாட்டுமக்களுக்கும் தொலைக்காட்சி ஊடாக, அரசியலமைப்பு நிபுணர் கள் ஊடாக வழங்கப்படும். அதற் கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.” - என்றார். (த-44)

## விநியோகஸ்தருக்கும் கொரோனா தொற்று

கொழும்பு, ஏப்.25
கொரோனா தொற்றாளர்களில் பல்பொருள் அங்காடியின் பொருள் விநியோகஸ்தர் ஒருவ ரும் உள்ளடங்குகிறார் என்று தெரிவிக்கப்படுகி றது. நேற்று புதிதாக அடையாளம் காணப்பட்டவர்களி லேயே அவர் இனங் காணப்பட்டுள்ளார்.



கொழும்பு 12, பண் டாரநாயக்க மாவத் தையில் வசிக்கும் இவர் தற்போது தனிமைப்ப டுத்தல் மையத்தில் இருந்தபோது, தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.
அவர் பொருள் விநியோகஸ்தராக இருந்தமை யினால், அவருடன் தொடர்புபட்டிருந்தவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.
இதேவேளை, நேற்றுமுன்தினம் வெலிக்கடை கடற்படை முகாமில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள், அண்மையில் ஜா எல, சுதுவெல பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தனிமைப்படுத்தல் நடவடிக் கையில் ஈடுபட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.
போதைவஸ்துடன் தொடர்புடைய குழுவினால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட தொற்று அபாயத்தை யடுத்து, கடற்படையினர் களமிறக்கப்பட்டு, பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ப)

## தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறந்தது

### ஆனந்த சங்கரி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 25
ஜனநாயக ரீதியாக ஒரு தேர்தலை நடத்துவதற்கான காலம் வரும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறந்தது என தமிழர் விடுதலைக்கூட்டணியின் செய லாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்தார்.
கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
மக்களால் வழங்கப்பட்ட ஜனநாயகத் தீர்ப்பு இங்கு மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் அதன் காலம் முடி வடைவதற்குள் கலைக்கப்பட்டுள்ளது. மக்களால் வழங்கப்பட்ட ஜனநாயக முடிவு மீறப்பட்டுள்ளது நாடா ளுமன்றத்தை தற்போதைய காலத்தில் கூட்டுவதே சிறந்தது. நாடாளுமன்றத்தைக் கலைக்காது மிகச்சி றந்த ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தியிருக்கலாம் அத னைச் செய்யத் தவறிவிட்டனர். எனவே தற்போதைய நிலமையைக் கருத்தில் எடுத்து தேர்தலை நடத்தாது இருப்பதே சிறந்தது. ஜனநாயக ரீதியாக ஒரு தேர்தலை நடத்துவதற்கான காலம் வரும் வரை தேர்தலை நடத் தாமல் இருப்பதே சிறந்தது - என்றார். (ப-6)




## பொலிஸாரின் சீருடையில் இணைந்து வருகிறது கமரா

கொழும்பு, ஏப். 25
இலங்கைப் பொலிஸார், நவீன தொழில் நுட்பங்களை தமது கடமைகளின்போது பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கில், சீருடையின் ஒரு பகுதியில் ஒளிப்படக் கருவி யொன்றை (கமரா) பொருத்து வதற்கு ஆலோசிக்கப்பட் டுள்ளது.
பிரச்சினைகளைத் தீர்க்கும் முகாமைத்துவம், போக்குவ ரத்து வாகன முகாமைத்துவம் என்பனவற்றுக்கு இது பெரி தும் உதவும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.
மேலும், இதற்காகப் பயன்ப டுத்தக்கூடிய ஒரு தொகை ஒளிப்படக்கருவிகள் இலங்கை மொபிட்டல் நிறுவனத்தினால் பொலிஸிடம் கையளிக்கட்டுள் ளன. (து)

## கசிப்பு நிலையம் முற்றுகை ஒருவர் கைது

கொக்கட்டிச் சோலை, ஏப்.25
கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரி விற்குட்பட்ட முதலைக்குடா ஆற் றினை அண்டிய களப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்று நேற்று வெள்ளிக்கிழமை முற்று கையிடப்பட்டது.
கொக்கட்டிச்சோலை பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமை யில், முதலைக்குடா கிராம அமைப் புக்கள், கிராம அலுவலர், இணைந்து முற்றுகை நடவடிக் கையை மேற்கொண்டனர். இதில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் கோடா போன் றன கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பல் வேறு இடங்களிலும் கசிப்பு உற் பத்தி நிலையங்கள் அண்மைக்கா லங்களாக முற்றுகையிடப்பட்டு வருகின்றன. இதன்போது பெரும ளவிலான பொருள்கள் கைப்பற் றப்படுகின்றன.
தற்போதைய அசாதாரண சூழ்நி லையில் மதுபான விற்பனை நிலையங்கள் பூட்டப்பட்டுள்ள நிலையிலும், கசிப்பு உற்பத்தி அதி கரித்திருப்பதாக சமூக ஆர்வலர் கள் தெரிவித்தனர். மேலும், இவ் வாறான உற்பத்தி நிலையங்களை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக் கைகளையும் அனைத்து தரப்பின ரும் மேற்கொள்ள வேண்டும் என வும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப)

## போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஏப்.25
நாட்டில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கும், அவ்வாறு போதைக்கு அடிமையானவர் களை குணப்படுத்துவதற்குமான நடவ டிக்கையை தேசிய அபாயகர ஔடதங் கள் அதிகார சபை எடுத்துவருகின்றது.
இச்சபையால் பொதுமக்களுக்கு அறி வூட்டும் வகையில் துண்டுபிரசுரங்கள் வெளியிடுதல், விசேட உளவள ஆலோ சனைகளை வழங்குதல் போன்ற செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கருத் தில் கொண்டு 0710301301 என்ற தொலைபேசி இலக்கத்தை அறிமுகம் செய்துள்ளது.
இதனூடாக பொதுமக்கள் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பிரச் சினை தொடர்பான முறைப்பாடுகள் மற் றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றுதேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் உதவி உளவியல் ஆலோசகர் ஜீ. விஜய தர்சன் தெரிவித்துள்ளார். (ஐ-150)

# நாடாளுமன்றத்தைக் கூட்டி சிக்கல் ஏற்படுத்தக் கூடாது

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25
கொரோனாவால் தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதைத் தீர்ப்பதற்கு அரசியல் இலாபம் தேடாமல் சகல அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படுவது அவசியம். நாடாளுமன்றை மீண்டும் கூட்டி அதனால் மீண்டுமொரு பிரச்சினையை ஏற்படுத்த விரும்பவில்லை. இதுபோன்ற அரசியல் குழப்பங்களின்போது வியாக்கியானம் அளிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்துக்கே இருக்கின்றது.

இவ்வாறு அரசமைப்புப் பேரவையில் தெரிவித்துள்ளார், முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய.

நாடாளுமன்றை மீண்டும் கூட்டி அதனால் மீண்டுமொரு பிரச்சினையை ஏற்படுத்த விரும்பவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்புப் பேரவை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் கூடியது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஆளும் கட்சி உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் தலதா அத்துக்கோரள, மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளான ஜாவிட் யூஸுப், என்.செல்வகுமார், அரசமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான தம்மிக்க தசநாயக்க மற்றும் நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இத்தவெல ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

பொதுத் தேர்தல் நடத்தப்படும் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு நெருக்கடிகள் மற்றும் கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடிகள் குறித்தும் நாடாளுமன்றை மீண்டும் கூட்டவேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் கோரிக்கைக்கு தீர்வொன்றை முன்னெடுக்கும் நோக்கிலும் அரசியல் அமைப்புப் பேரவை கூட்டப்பட்டது.

ஆரம்பத்தில் அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள், சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னேற்றங்களை ஆராய்ந்துள்ளனர். சுயாதீன ஆணைக்குழுக்களால், அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கைகளும் நேற்று ஆராயப்பட்டன. அதேபோல் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பிய இரண்டு கடிதங்களும் இங்கு அவதானத்தில் கொள்ளப்பட்டன.

### இடமாற்றம்

தேர்தல் காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களத்துக்குள் மேற்கொள்ளப்படும் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள், குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க மற்றும் தலதா அத்துகோரள ஆகியோர், இதுவரை இடம்பெற்ற பொலிஸாரின் இடமாற்றங்கள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தனர். இதற்கமைய, பொலிஸ் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டுவர இங்கு தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்தில் காணப்படும் வெற்றிடங்கள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அடுத்த அரசமைப்புப் பேரவைக் கூட்டத்துக்கு முன்னர் இந்த வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இதன் பின்னர் கொவிட்19 தொற்றுநோய் பரவல் அச்சுறுத்தலை அடுத்து தற்போது நாட்டின் சுகாதார நிலைமைகள் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார், பல சவால்கள் காணப்பட்ட போதிலும் வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்குக் கொண்டுவருவதற்கு அரசு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் விரிவான விளக்கமொன்றை முன்வைத்திருந்தார்.

கொவிட்19 தொற்றுநோய் நிலைமையால் சர்வதேச நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் குறித்து அரசு கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் அதிகளவில் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்புப் பேரவைக்கு எடுத்துக் கூறினார்.

### நாடாளுமன்றம் கூடவேண்டிய அவசியம்

இந்தநிலையில், நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படுவதன் அவசியம் மற்றும் நிதி விடயங்களைக் கையாள்வதில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு மீண்டும் நாடாளுமன்றைக் கூட்டுவதே சிறந்த தெரிவாக இருக்கும் என்று காரணம் கூறிய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசு மக்களின் பக்கம் சிந்திக்க வேண்டும் என்றால் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றில் கலந்துரையாடி அனைவரும் இணைந்து பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அதே காரணிகளை வலியுறுத்தியுள்ளார். இந்த நிலைமைக்கு முகங்கொடுக்கும்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கடந்த நாடாளுமன்றின் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என்று முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் சில காரணிகளை முன்வைத்தனர்.

இந்தநிலையில் சகலருடைய கருத்துகளையும் கவனத்தில் எடுத்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, கொவிட்19 தொற்றுநோயால் ஏற்பட்டுள்ள நிலைமை ஒரு தேசிய நெருக்கடி என்பதையும், அதனைத் தீர்ப்பதற்கு அரசியல் இலாபம் தேடாமல் சகல அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படுவது அவசியம் என்று வலியுறுத்தினார். நாடாளுமன்றை மீண்டும் கூட்டி அதனால் மீண்டுமொரு பிரச்சினையை ஏற்படுத்த விரும்பவில்லை. இது போன்ற அரசியல் குழப்பங்களின்போது வியாக்கியானம் அளிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்துக்கே இருக்கின்றது. உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கினால் அதற்கமைய செயற்பட நான் தயாராக உள்ளேன். நாம் அனைவரும் அதற்குக் கட்டுப்பட்டுள்ளோம் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

(கு)



# மாஸ்க் அணியாதோரை எச்சரிக்கும் பொலிஸார்

வவுனியா, ஏப்.25
முகக்கவசங்கள் அணியாது (மாஸ்க்) வீதிகளில் பயணிப்போரை எச்சரிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட கொரோனா தடுப்பு பொலிஸ் பிரிவினர் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக மாஸ்க் அணியாது செல்பவர்களை மறித்து எச்சரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு மாஸ்க் அணியாது செல்வர்களை எச்சரிப்பது மாத்திரம் அல்லாது அவர்களது வாகனத்தை அவ்விடத்திலேயே நிறுத்தி விட்டு மாஸ்க் வாங்கி அணிந்து வந்து வாகனத்தை எடுத்துச்செல்லுமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தனர். பொலிஸாரின் இச் செயற்பாட்டை பலரும் வரவேற்றுள்ளனர். (ஐ-18)

# மக்களின் வயிற்றில் அடித்த அரிசி ஆலை

## அதிரடியாக குதித்தனர் அதிகாரிகள்

**வவுனியா, ஏப்.25**
**கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலை பொறிக்கப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் வைத்திருந்த அரிசி மூடைகள் பாவனையாளர் அலுவலகள் அதிகார சபையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அரசின் உத்தரவாத விலையையும் விட கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் அரிசி ஆலைகளை சோதனைக் குட்படுத்தும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது வவுனியா ஹொரவப்பொத்தானை வீதி வெளிக்குளம் பகுதியில் அமைந்துள்ள அரிசி ஆலையை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் சோதனை செய்தனர். அதிக விலை பொறிக்கப்பட்ட 400க்கு மேற்பட்ட அரிசி மூடைகளை அவர்கள் அங்கு கைப்பற்றினர்.

சம்பா அரிசி 1கிலோ 90 ரூபா கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த அரிசி ஆலையில் காணப்பட்ட 400க்கு மேற்பட்ட அரிசி மூடைகளிலும் 98 ரூபா என பொறிக்கப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி மூடையில் அதிக விலை பொறிக்கப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரினால் குறித்த அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக வவுனியா மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றமை மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பை பெற்றுள்ளது. (ஐ-110)

# ஒற்றுமையுடன் செயற்பட்டாலே கொரோனாவை வெல்ல முடியும்

## சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவிப்பு

**கொடிகாமம், ஏப்.25**

**எமது நாட்டில் கொரோனாவுக்கும், மக்களுக்கும் இடையே இடம்பெறும் போரில், அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டாலே அதை வெல்ல முடியும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

சாதி சமயம், குலபேதம், செல்வந்த, வறிய, உயர்வு, தாழ்வு நிலையை வைரஸ் பார்ப்பதில்லை. வைரஸ் எவரது உடலிலும் உட்செல்லக்கூடியது என்பதுடன் அது எவரினதும் தவறினால் ஏற்பட்டதுமல்ல. நினைவில் கொள்ளவும். இது இந்நாட்டில் வாழும் மக்களுக்கும் வைரசுக்கும் இடையேயான போராகும். அனைவரும் ஒன்றிணைந்து எழுச்சியுடன் செயற்பட்டாலே தவிர இந்த யுத்தத்தை எம்மால் வெற்றி கொள்ளமுடியாது. இந்நோயால் பாதிப்புற்ற எமது சகோதரர்களையும் அவர்களைச் சூழவுள்ளோரையும் கௌரவமாகவும் பரிவுடனும் கவனிக்க வேண்டியது எமது சகலரினதும் கடமையாகும். நம் சகலரினதும் பாதுகாப்பிற்காக நோய் அறிகுறி தொடர்பில் அவதானம் செலுத்துவதும் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சைக்கு உட்படுவதும், நாம் நமக்கும், நமது நாட்டிற்கும் செய்யக்கூடிய புத்தி சாதுர்யமான செயலாகும். இது பயப்படுவதற்கோ வெட்கப்படுவதற்கோ உரிய விடயமல்ல என்பதுடன் இது உங்களால் இலங்கையர்கள் நம் அனைவருக்காகவும் செயற்படுத்தப்பட வேண்டிய பாரிய பொறுப்பாகும். நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலை வரும் சகலரையும் பேதமின்றி கருணையுடன் அரவணைத்துக் காப்பதற்கு எமது சகல சேவைகளும் தயார் நிலையில் உள்ளன - என்றனர். (ப-9)

# வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,ஏப்.25

சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் அரச அலுவலகர் ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது .

சாவகச்சேரியில் உள்ள அரச அலுவலகத்தில் அபிவிருத்தி அலுவலராகப் கடமையாற்றும் இவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை பின்தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஜ -9)

# 10 நாள்களில் 20 ஆடுகள் சாவு

மன்னார்,ஏப்.25

மடு பிரதேச சபைக்குட்பட்ட பெரிய முறிப்பு கிராமத்தில் பத்து நாள்களில் இருபது ஆடுகள் இறந்துள்ளதாக பண்ணையாளர் கவலையுடன் தெரிவித்தார்

மடு பிரதேச சபைக்குட்பட்ட பெரிய முறிப்பு கிராமத்தில் வசித்து வரும் பி.செலஸ்ரின் அருளப்பு (வயது-51) என்பவர் தனது வாழ்வாதார தொழிலாக கால்நடை வளர்ப்பு,விவசாயம் போன்றவற்றை செய்து வருகின்றார்.

இவரிடம் அறுபது ஆடுகள் வரை உள்ளன. இவற்றின் மூலம் வரும் வருமானங்களைக் கொண்டே நான்கு பேர் கொண்ட தனது குடும்பத்தை நடத்தி செல்கின்றார் ஆனால் கடந்த பத்தாம் திகதியில் இருந்து 20க்கும் மேற்பட்ட ஆடுகள் வயிறு தாடை கண் போன்றவை வீங்கி இறந்துள்ளன.

இந்தச் சம்பவமானது பண்ணையாளரின் குடும்பத்துக்கு மிகவும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக பெரிய முறிப்பு கிராம அலுவலர் மற்றும் கால்நடை வைத்தியருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-213)

# கழிவுப் பொருள்களில் பல்வேறு உற்பத்திகள்

## இளைஞனின் முயற்சி

கிளிநொச்சி,ஏப்.25

கழிவுப்பொருள்களைக் கொண்டு பல்வேறு உற்பத்திப் பொருள்களைத் தயாரித்துள்ளார் பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த இளைஞன்.

சேனாதிராசா சுதர்சன் என்பவர் தனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தி பூச்சாடிகள், வீட்டு அழகு சாதனப் பொருள்கள், மின் குமிழ்களுக்கான வர்ணங்கள் உள்ளிட்ட பல பொருள்களை வடிவமைத்துள்ளார். தற்போது அவற்றை விற்பனை செய்து வருகிறார்.

இது தொடர்பில் சுதர்சன் தெரிவித்ததாவது, ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் முன்னர் இதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருந்தேன். அதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைத்தது. வீட்டில் இருந்து கைவண்ணப் பொருள்களை உருவாக்கினேன். அவற்றை மக்கள் பார்வையிடுவதுடன் கொள்வனவும் செய்து வருகின்றனர். எனது முயற்சி தொடரும் - என்றார். (க-6)

# வழக்குகளுக்கு புதிய திகதிகள்

சாவகச்சேரி. ஏப்.25.

நீதிமன்றங்கள் இயங்காததால், நடைபெறாத வழக்குகள், நடைபெறுவதற்கான புதிய திகதிகள் பற்றிய விவரம் சாவகச்சேரி நீதிமன்ற வாசலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுக் காரணமாக பிறப்பிக்கப்பட்ட தொடர் ஊரடங்குச் சட்டத்தால் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம். மற்றும் மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் கடந்த மார்ச் 16ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை நடைபெறவிருந்த வழக்குகள் இதுவரை நடைபெறவில்லை அந்த வழக்குகளின் விவரங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட நீதிமன்றத்தில் மார்ச். 16, 19 , 23, 26. 30 ஏப்ரல். 02 , 20 , 23 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த வழக்குகளுக்கு புதிய திகதிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நீதிவான் நீதிமன்றத்தில் மார்ச் 17 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் மே 26ஆம் திகதியும் மார்ச் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் மே 27 ஆம் திகதியும் மார்ச் 19ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் மே 28 ஆம் திகதியும் மார்ச் 20 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் மே 29 ஆம் திகதியும் மார்ச் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூன் 02 ஆம் திகதியும் மார்ச் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூன் 03 ஆம் திகதியும் மார்ச் 27 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூன் 26 ஆம் திகதியும் மார்ச் 31 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூன் 30 ஆம் திகதியும் ஏப்ரல் 01 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை முதலாம் திகதியும். ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை இரண்டாம் திகதியும் ஏப்ரல் மூன்றாம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை மூன்றாம் திகதியும் ஏப்ரல் 20 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை ஆறாந் திகதியும் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலைஏழாந் திகதியும் ஏப்ரல். 22ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை எட்டாம் திகதியும் ஏப்ரல் 23 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை ஒன்பதாம் திகதியும். ஏப்ரல் 24 ஆம் திகதி (நேற்று ) நடைபெறவிருந்த வழக்குகள் ஜூலை பத்தாம், திகதியும் நடைபெறுமெனவும் நீதிமன்றப் பதில் பதிவாளர் அறிவித்துள்ளார்

(ப-9)

# மருமகன் தாக்கி மாமி கொலை

## அவருடைய மனைவியும் தடுக்கச் சென்றவரும் காயம்

கொழும்பு, ஏப். 25

மருமகனால் தாக்கப்பட்ட மாமி உயிரிழந்துள்ளார் என்றும் சந்தேகநபரின் மனைவியும் மற்றொருவரும் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தம்புள்ளை - பெல்வெர பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சந்தேகநபரான மருமகன் மதுபோதையில் இருந்தபோது அவ்வாறு தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மனைவி மற்றும் மனைவியின் தாயாருடன் முரண்பட்டுள்ளார். அதனால் மனைவி மற்றும் மாமியை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளார். இவர்களை சமாதானப் படுத்தும் நோக்கில் வந்த அயலவரையும் சந்தேகநபர் தாக்கியுள்ளார் .

படுகாயமடைந்த மூவரும் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது சந்தேகநபரின் 61 வயதுடைய மாமி உயிரிழந்துள்ளார். மனைவியும் மற்றைய நபரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

# மின் பாவனை

## 30 வீதத்தால் குறைவு

கொழும்பு,ஏப்.25



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரணசூழ்நிலை காரணமாக மின்சார பாவனையானது 30 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக மின்சக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், சிக்கனமாக கையாளாவிட்டால் வீட்டு மின் பாவனையானது அதிகரிக்கக்கூடும். எனவே .

மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு, நுகர்வோரை மின்சக்தி அமைச்சின் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# தேர்தலை எதிர்கொள்வது நோயை வரவழைக்கவே

## அரவிந்தகுமார் தெரிவிக்கின்றார்



பதுளை, ஏப். 25
நாடும் நாட்டு மக்களும் இக்கட்டான நிலையில் இருக்கும் நிலையில், தேர்தலொன்றை எதிர்கொள்ள நடவடிக்கைகளை எடுப்பது கொடிய நோய்க்கு மென்மேலும் வலுச் சேர்ப்பதாக அமையும் என்று பதுளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டைமீட்டு அதனை பாதுகாப்பதே நாட்டின் தலைவரொருவரினதும் அரசினதும் தலைமைத்துவப் பண்பு. அதனைவிடுத்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமது அரசியல் அதிகாரங்களைப் பலப்படுத்திக்கொள்ள நினைப்பது தலைமைத்துவப் பண்புகளுக்கு ஒவ்வாத செயலாகும்.
வாழ்வா சாவா என்ற நிலையே இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதற்கு முற்றுப் புள்ளிவைக்கவேண்டும். மக்கள் இருந்தால் தான் நாடு இருக்கும். அதற்குப் பின்புதான் அரசியல் செயல்பாடுகள் இடம்பெறமுடியும் - என்றார். (த)

# ஜனநாயக விழுமியங்களுக்கு புறம்பாக செயற்படுகிறது அரசு

## சிவமோகன் குற்றஞ்சாட்டுகின்றார்



வவுனியா, ஏப். 25
ஜனநாயக விழுமியங்களை ஏற்றுக் கொண்டு நாட்டை சுமுகமான நிலையில் நடத்த வேண்டிய கோத்தாபய அரசு அதற்குப் புறம்பான நடவடிக்கைகளை எடுத்துவருவது சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏப்ரல் 26ஆம் திகதி தேர்தலை நடத்துவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்ட போதும்கூட அநாவசியமான முறையில் ஜனநாயகத்தைப் புறந்தள்ளி செப்ரெம்பர் வரை செயற்பட இருந்த நாடாளுமன்றை தனது ஏதேச்சதிகாரத்தைப் பயன்படுத்தி முடக்கினார்.
தனக்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்றை கலைத்து விட்டார். மீண்டும் அந்த தேர்தல் நடத்த முடியாமல் போகும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போதும் கூட தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையை ஒட்டு மொத்தமாக மறுத்து நின்றார். தேர்தல் ஆணைக்குழு உயர் நீதிமன்றின் பரிந்துரையைப் பெற்று ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோதும், அதையும் சர்வாதிகார ரீதியில் முடக்கி விட்டார்.
இன்று சர்வாதிகாரத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ள தேர்தல் ஆணைக்குழு ஜனநாயகத்துக்குப் புறம்பான தீர்மானங்களை எடுத்து நிற்கின்றது. சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவை கடந்த கால பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து நிறைவேற்றி இருந்தார்கள். இன்று அந்த சுதந்திர ஆணைக்குழுவும் சர்வாதிகாரத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கின்றது.
மக்களுக்கான நிவாரனங்களை வழங்கக் கூடிய சூழல் நாடாளுமன்றில் இருக்கின்றபோதும், அந்த நிவாரணங்களை வழங்காது நாடாளுமன்றைக்கூட்டி அதற்கான தீர்மானங்களை எடுக்காது மக்களைப் பட்டினிச் சாவில் தள்ளி விட்டிருக்கின்றது இந்த அரசு.
ஜனாதிபதி தேர்தலில் ரணில் அரசு தோல்வியடைந்ததும், ஜனநாயகத்தை மதித்து மஹிந்த ராஜபக்ஷ அரசிடம் ஆட்சியை ஒப்படைத்தது. ஜனநாயக ரீதியில் ஒப்படைக்கப்பட்ட ஆட்சியைக்கூட சர்வாதிகார ரீதியில் திசை திருப்பி நிற்கின்றது இன்றைய கோத்தாபய அரசு - என்றார். (த)




ஐக்கிய நாடுகள் சபையின் 50 ஆவது உலக பூமி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பழ மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-150)

# மூன்று மாதங்களுக்காவது தேர்தலை பிற்போடுங்கள்

## ‘கபே’ அமைப்பு வேண்டுகோள்

**கொழும்பு, ஏப். 25**
**பொதுத்தேர்தலை மூன்று மாதங்களுக்காவது பிற்போடப்பட வேண்டுமென்று கபே அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது பற்றி அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தெரிவித்ததாவது:**

ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு தேர்தலை நடத்துவதற்குரிய திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டாலும் அதற்கான சரியான சூழல் இதுவரைக்கும் இல்லையென்று நம்புகின்றேன். தேர்தலொன்றின்போது தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் காணப்படுகின்றன.
தற்போதைய சூழ்நிலையில் சகல கட்சிகளுக்கும் சுயேட்சை குழுக்களுக்கும் சகல வேட்பாளர்களுக்கும் தேர்தல் பரப்புரை நடவடிக்கைளை முன்னெடுப்பதற்குரிய சூழ்நிலை தற்போது இல்லை. சகல வேட்பாளர்களுக்கும் ஒரே அளவிலான தேர்தல் சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது. சில வேட்பாளர்கள் ஊடாக உலர் உணவு பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. என்றார். (த)

## சுகாதார பிரச்சினையை முன்வைத்து

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அரச பேருந்துப் பணியாளர்கள்

வவுனியா, ஏப்.25
இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் சுகாதார பிரச்சினையை முன்வைத்து நேற்றுக் காலை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
எனினும் அதிரடியாக விரைந்து செயற்பட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தப் பணிப்புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டு வந்தனர்.
கொரோனா தொற்று அச்சம் காரணமாக பேருந்துகள் அனைத்தும் தண்ணீரில் கழுவிய பின்னர் தொற்று நீக்கும் மருந்துகள் தெளித்து அதன் பின்னரே சேவையில் ஈடுபடுகின்றன. இதுவரையிலான காலப்பகுதியில் வவுனியா இ.போ.ச சாலையிலும் இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும் நேற்று இ.போ.ச வவுனியா சாலையிலுள்ள பேருந்துகளில் தொற்று நீக்காததால் தாம் சேவையில் ஈடுபட மாட்டோம் என தெரிவித்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இ.போ.ச வவுனியா சாலைக்கு விரைந்த வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி பேருந்துகளுக்கு தொற்று நீக்கும் மருந்துகள் தெளித்து சுத்தப்படுத்தி உடனடியாக சேவையில் ஈடுபட்டுத்துமாறு கோரினர். இதனால், ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முற்பகல் 11 மணியுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்தன. (ஐ-18)

# 10 குடும்பங்களுக்கு கூரை விரிப்புக்கள்

சாவகச்சேரி,ஏப்.25
தென்மராட்சி தெற்கு மறவன்புலவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை வீசிய மினிப்புயலால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு கூரை விரிப்புகள் (தறப்பாள்) வழங்கப்பட்டன. .
மினி புயலால் மறவன்புலவு வடக்கைச் சேர்ந்த 7 குடும்பங்களும், மறவன்புலவு கிழக்கைச் சேர்ந்த 3 குடும்பங்களும், அந்தப் பகுதிகளில் உள்ள 3 இந்து ஆலயங்களும், பொது நோக்கு மண்டபமும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கூரை விரிப்புக்கள் நேற்று வழங்கப்பட்டன. (க)

# கனகாம்பிகை ஆலய திருவிழா நிறுத்தம்

கிளிநொச்சி,ஏப்.25
கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்வருடாந்தப் பெருவிழா தற்போதய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டுள்ளது.
எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த திருவிழா தொடர்பாக, ஆலயப் பிரதமகுருக்கள், தர்மகர்த்தா சபையினர், அறங்காவலர் சபையினர், திருவிழா உபயகாரர்கள் ஆகியோரின்ஆலோசனைகளைப் பெற்று திருவிழாவை நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
திருவிழா காலத்தில் ஆலயத்துக்குள் அனுமதி பெற்று ஆலயக்குருக்கள், உதவியாளர்கள், உபயகாரர் மூவர்அறங்காவலர் சபையினர் உட்பட 10 பேர் மட்டும் கலந்து கொண்டு ஸ்தாபன அபிசேகம் மட்டும்நடத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தீர்த்தத் திருவிழா நாள் மாலையில் நடைபெறும் பொங்கல்உற்சவமும் நடைபெறாது. அன்றயதினம் காலை ஒருவழுந்துப்பானை மட்டும் நிர்வகத்தினரால் வைத்துபொங்கப்படும். பொங்கலுக்கான படிஅரிசி கொடுக்கும் அடியவர்கள் முற்கூட்டியே ஆலயத்தில் ஒப்படைத்து விடவும். இது தவிர்ந்த வேறு நிகழ்வுகள் நடைபெறமாட்டாது.
கொரோனா தொற்றிலிருந்து அடியவர்களைக் காப்பாற்றும்நோக்குடனும், அரசாங்கத்தின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டும் இந்தத் தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (க-222)

# தனியார் மருத்துவமனைகளின் ஒத்துழைப்புடன் பரிசோதனை

## சுகாதாரப் பணியகம் தெரிவிக்கின்றது

**கொழும்பு, ஏப். 25**

**தனியார் மருத்துவமனைகளின் ஒத்துழைப்புடன், கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட் 19 தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று நடைபெற்ற தனியார் மருத்துவமனைகள் சிலவற்றின் பணிப்பாளர்களுடனான விஷேட கலந்துரையாடலை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்தது.

இந்த நிலையில் ஒரே நாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாதிரிகளை பரிசோதனைக்குட்படுத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. இதுவரை இலங்கையில், கொரோனா தொற்று குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகள் 13 அரச பரிசோதனை மையங்கள் ஊடாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 600 வரையிலான மாதிரிகளே நாளொன்றுக்கு பரிசோதிக்கப்பட்டு வந்த நிலையில், அதனை அதிகரிக்க வேண்டிய கட்டாய சூழல், சுகாதாரத் துறைக்கு ஏற்பட்டுள்ளது. அதன்படி டேர்டன்ஸ் மருத்துவமனை, நவலோக மருத்துவமனை, ஆசிரி மருத்துவமனை மற்றும் லங்கா மருத்துவமனை ஆகிய தனியார் மருத்துவமனைகளில் இந்த பி.சி.ஆர். குறித்த பரிசோதனைகளை முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதன்படி சேகரிக்கப்படும் மாதிரிகளில், இந்த தனியார் மருத்துவமனை ஆய்வு கூடங்களில் நாளொன்றுக்கு தலா 100 பரிசோதனைகள் வரை முன்னெடுக்க முடியுமாக இருக்கும் என்று சுகாதாரப் பணியகம் தெரிவிக்கின்றது. அதன்படி நாளொன்றுக்கு இலங்கையில் ஆயிரத்துக்கும் அதிகமான பரிசோதனைகளை முன்னெடுக்கக் கூடியதாக அமையும் என்று அந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (த)

# காட்டுக்குள் நுழைந்த மூவர் கைது

கிளிநொச்சி, ஏப்.25

சுண்டிக்குளம் சாலைக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்களை வெட்டிய மூவர் தர்மபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக காட்டுக்குள் நுழைந்த அவர்களிடமிருந்து மரம் வெட்டுவதற்கு பயன்படுத்திய இரண்டு இயந்திர வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிகவிசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-113)

# மதிய உணவைப் பெறுவதில் பணியாளர்கள் சிரமம்

சாவகச்சேரி, ஏப்.25

சாவகச்சேரி நகரப் பகுதியில் உணவகங்கள் திறக்க அனுமதி வழங்கப்படாததால் நகரப் பகுதியில் உள்ள அரச தனியார் அலுவலகங்கள் மற்றும் வங்கிகளில் பணிபுரிவோர் மதிய உணவுக்காக சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அலுவலகங்களில் விரல் முத்திரை இயந்திரத்தில் வரவினைப் பதிவு செய்யும் அலுவலர்கள் கடமை நேரம் முடியும் வரை நிற்கவேண்டியுள்ளது. முன்னர் நகரப் பகுதியில் உள்ள உணவகங்களில் பெண் அலுவலர்கள் உட்பட பெருமளவு அலுவலர்கள் மதிய உணவுகளைப் பெற்றனர். தற்போது உணவகங்கள் திறக்கப்படாததால் அலுவலர்கள் மதிய உணவின்றிக் கடமையாற்றுவதாகத் தெரிவித்தனர்.

தூர இடங்களிலிருந்து வரும் அலுவலர்கள் பெரும்பாலும் உணவகங்களை நம்பியே கடமைக்கு வருகின்றனர்.

மூடப்பட்டுள்ள உணவகங்களில் பொதி செய்த மதிய உணவு வழங்க சுகாதார திணைக்களத்தினர் அனுமதி வழங்கவேண்டுமெனவும் அலுவலர்கள் கேட்டுள்ளனர். (ஐ- 9)

# கொரோனா பாதிப்பில் நான்கு வகை வைரஸ்

## பல்கலை.விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.25

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களின் உடலில் நான்கு வகையான வைரஸ் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் டெங்கு விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட கொரோனா வைரஸின் முழுமையான மரபணு வரிசைப்படுத்தலின் போது இது தெரிய வந்துள்ளது.

இந்தச் சோதனைகள் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளிடமிருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகள் மீது செய்யப்படுகின்றன. இலங்கையில் வைரஸின் வரிசைமுறை மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறை. விஞ்ஞானிகள் பல வகையான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி வருவதைக் கண்டறிந்துள்ளனர், அவற்றில் சில மற்றவர்களை விட அதிகமான வைரஸ்களைக் கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# முஸ்லிம் மக்கள் சட்டத்தை நாட அனுமதிக்க வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்

இலங்கை அதிகாரிகள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும், சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர்கள் சட்டத்தரணிகளைத் தொடர்பு கொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பான கொள்கையொன்றை அரசு வெளியிட்ட பின்னர் இடம்பெற்றுள்ள கைதுகள் இலங்கையின் முஸ்லிம் சிறுபான்மையினத்தவரின் பாதுகாப்பு குறித்த கரிசனையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வருடம் இடம்பெற்ற மிகவும் கொடூரமான உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்கு காரணமானவர்களை நீதி விசாரணைகளுக்கு உட்படுத்தவேண்டும் எனினும் கைதுகள் சட்டபூர்வமானவையாக காணப்படவேண்டும்.

நன்கறியப்பட்ட முஸ்லிம்கள் சமீபத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளமையும், அரசின் பக்கச்சார்பான நடவடிக்கைகளும், முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரிக்கும் குரோதப் பேச்சுகளும் பரந்துபட்ட முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு குறித்த கரிசனைகளை எழுப்பியுள்ளது. இலங்கையின் அனைத்து மக்களும் எதிர்கொள்ளும் கொரோனா வைரஸ் ஆபத்து இலங்கை அரசாங்கம் நாட்டில்இன உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை அரசுக்கு வழங்கியுள்ளது. பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அதிகாரிகள் பாரபட்சமற்ற முறையில் செயற்படுகின்றனர் என்ற தோற்றம் உருவாகுவது முக்கியமானது என்றார். (ப)

# சுகாதார விதி முறைகளை பின்பற்றுமாறு அறிவிப்பு

சாவகச்சேரி, ஏப். 25

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் வீதியோரங்களில் இயங்கும் மரக்கறி, கடலுணவுகள் விற்பனை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதார விதி முறைகளை பின்பற்றுமாறு சாவகச்சேரி நகரசபையினர், சாவகச்சேரி பொலிஸார் மற்றும் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் தமது கடைகளுக்கு முன்னால் கை கழுவக் கூடிய வசதி செய்திருக்க வேண்டும். வியாபாரிகள் வர்த்தகர்கள் முகக் கவசம், கையுறை அணிந்திருக்க வேண்டும். சிற்றுண்டி நிலையங்களில் உணவுப் பொருள்கள் வழங்கும் போது உரிய உபகரணங்களும் பயன்படுத்த வேண்டும். நிலையங்களுக்கு முன்பாக ஒரு மீற்றர் இடைவெளியை ஏற்படுத்தி சமூக இடைவெளியைக்கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு நகரப்பகுதிக்கு வருகின்ற அனைத்து மக்களையும் சார்ந்ததாகும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-9)

# தென்மராட்சி பிரதேசத்தில்

# பாதிக்கப்பட்ட 16,221 பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேசத்தில் தொடர் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட 16 ஆயிரத்து 221 பேருக்கு சமுர்த்தி அலுவலகத்தால் தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள், காத்திருப்போர் மற்றும் தொடர் ஊரடங்கால் தொழில்களை இழந்தவர்கள் ஆகியோருக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 578 பேருக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு வேளையில் 7 ஆயிரத்து 649 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும், காத்திருப்போர் பட்டியலில் உள்ள 2 ஆயிரத்து83 பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஊரடங்குச் சட்டத்தால் தொழில்களை இழந்த 6 ஆயிரத்து 489 பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த 22 மற்றும் 23ஆம் திகதிகளில் வழங்கப்பட்டது.

கொடுப்பனவுகள் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் கிராம அலுவலர் அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் முன்னிலையில் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)





# விற்பனைக்கு வழியில்லாமல் கைவிடப்படும் மரக்கறிகள்!

## கிளிநொச்சியில் இந்த அவலம்

**கிளிநொச்சி, ஏப். 25**

**கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முழங்காவில் விவசாய போதனாசிரியர் பிரிவில் ஏராளமான விவசாயிகளிடம் மரக்கறி உற்பத்திகள் பெருமளவில் தேக்கமடைந்துள்ளன.**

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சந்தைகள் பூட்டப்பட்டுள்ளன. அத்துடன் மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் அவலத்துக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முழங்காவில் விவசாய போதனாசிரியர் பிரிவில் ஏராளமான விவசாயிகளின் உற்பத்திகள் மரங்களிலேயே கைவிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முழங்காவில் விவசாய போதனாசிரியர் மகிழன் தெரிவித்ததாவது:

கொரோனா நெருக்கடியைத் தொடர்ந்து மரக்கறிகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். முதல் கட்டமாக ஏக்கர் கணக்கில் பூசணி, கோவா, தக்காளி, கறிமிளகாய், பப்பாசி, வத்தகை ஆகிய மரக்கறிகள், பழவகைகளை பயிரிட்டு ஆயிரக்கணக்கான கிலோக்கணக்கில் விற்பனை செய்ய முடியாமல் தவிக்கும் 15 விவசாயிகளின் விபரங்களை தொகுத்துள்ளேன். எமது விவசாயிகளுக்கு சரியான முறையில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் மீண்டும் மீண்டும் நட்டமடையாமல் காப்பாற்ற முடியும் என்றார்.

முழங்காவிலை சேர்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் என்கிற விவசாயி இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நான் 1995ஆம் ஆண்டில் இருந்து விவசாயம் செய்து வருகிறேன். இம்முறை 18 ஏக்கரில் விவசாயம் செய்துள்ளேன். இரண்டரை ஏக்கரில் கறிமிளகாய், இரண்டு ஏக்கரில் தக்காளி, கோவா போன்ற பயிர்களை பயிரிட்டேன். வாழைக்குலைகளையும் சந்தைப்படுத்த முடியவில்லை. ஏற்கனவே விற்பனை வாய்ப்பு இல்லாததால் தக்காளித் தோட்டம் அழிந்து விட்டது. ஒன்றரை ஏக்கரில் 6000 கிலோக்களுக்கு மேல் காய்களுடன் இருந்த கறிமிளகாய் தோட்டத்தையும் விற்பனை வாய்ப்பு இல்லாததால் உழுது விட்டேன். மீதி உள்ள கறி மிளகாய்களும் காய்த்து பழுத்து தொங்குகின்றன.

முழங்காவிலில் இருந்து நாளாந்தம் 15க்கும் மேற்பட்ட பாரவூர்திகளில் தம்புள்ளைக்கு மரக்கறிகள் கொண்டு செல்லப்படுவது வழமையாகும். தற்போது அனுமதிப்பத்திர பிரச்சினைகளால் நான்கு பாரவூர்திகள் மட்டுமே செல்கின்றன. இதனால் சந்தைவாய்ப்பு என்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. அனுராதபுரம் விவசாயிகளிடம் பூசணிக்காய்களை நிர்ணய விலையில் கொள்வனவு செய்த அரசாங்கம் எங்களது மரக்கறிகளுக்கும் நியாயமான விலையை நிர்ணயம் செய்து கொள்வனவு செய்ய வேண்டும் - என்றார். (ம)

## நம்ழானுக்காக வந்தது 30தொன் பேரீச்சம்பழம்

கொழும்பு, ஏப். 25

புனித நம்ழானை முன்னிட்டு நாடு முழுவதும் விநியோகிப்பதற்காக 30 தொன் பேரீச்சம்பழம் வழங்கப்பட்டுள்ளது. பறகஹதெனிய ஜே.ஏ.எஸ்.எம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சவூதி அரேபிய அரசு இதை வழங்கியிருந்தது.

ஜே.ஏ.எஸ்.எம் நிறுவனத்தலைவர் மௌலவி என்.பீ.எம். அபூபக்கர் சித்தீக் மதனியின் வழிகாட்டலில் நிறுவன பொதுச் செயலாளர் ஏ.எல்.கலிலுர் ரஹ்மான் தலைமையில் இந்தப் பேரீச்சம் பழம் விநியோகம் நிறுவனத்தின் தலைமையகமான பறகஹதெனியவில் நடைபெற்றது. (த)



## விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராய போத்தல்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 25

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட வேளையில் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 88 சாராயப் போத்தல்கள் மற்றும் 20 பியர் ரின்கள் என்பன பண்டாரவளைப் பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேகத்தில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-ஐ)

## 12 குடும்பங்களுக்கு 10,000 கொடுப்பனவு

சாவகச்சேரி,ஏப்.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சினால் தலா 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு விரைவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## வீட்டுத் தோட்டத்துக்கு 300 பேருக்கு விதைகள்

காரைநகர், ஏப். 25

வீட்டுத்தோட்ட அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் காரைநகரில் 300 பயனாளிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன.

10 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக 4 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைப்பதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக 7 ஆயிரத்து 500 வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. கத்தரி, மிளகாய், வெண்டி, பயற்றை, அவரை போன்ற விதைகள் அடங்கிய பொதி 20 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அந்தந்த பிரதேசங்களில் உள்ள கமநல சேவைகள் நிலையங்களுக்கு ஊடாக பொதிகள் வழங்கப்படுகின்றன. காரைநகரில் முதற்கட்டமாக 300 பேருக்கு இந்த விதைப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டத்தில் அடுத்த கட்டமாக ஏனையோருக்கும் விதைப்பொதிகள் வழங்கப்படவுள்ளன. (ம-க)

## வீதி விபத்தில் பெண் சாவு

மோட்டார் சைக்கிளும் கெப் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உயிரிழந்தார். இந்த விபத்து பொத்துவில் அறுகம்பே பிரதான வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. பாணமை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் பொத்துவில் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மேய்ச்சலுக்கு கட்டிய மாட்டை இறைச்சியாக்கினர் விஷமிகள்

### அல்லைப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் மேய்ச்சலுக்காகக் கட்டியிருந்த மாட்டை விஷமிகள் இறைச்சியாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் மூன்று மாடுகள் வளர்த்து வருகிறார். கடந்த 18ஆம் திகதியன்று தனது வீட்டுக்கு அருகே சின்னமண்குழி குளத்தடியில் மேய்ச்சலுக்காக மாடுகளைக் கட்டியுள்ளார். பிற்பகல் மூன்று மணியளவில் மாடுகளுக்குத் தண்ணீரும் வைத்துள்ளார். அதன் பின்னர் மாலை ஐந்து மணியளவில் மாடுகளை வீட்டுக்குக் கொண்டுவரச் சென்றபோது ஒன்றரை வயது மதிக்கத்தக்க மாடொன்றைக் காணவில்லை.

அயலிலுள்ள விவசாயிகளிடம் இது பற்றிக் கூறியுள்ளார். அவர்களும் சேர்ந்து மாட்டைத் தேடிவந்த நிலையில், அது வெட்டி இறைச்சியாக்கப்பட்டமை தெரியவந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை அன்று அல்லைப்பிட்டி வைரவர் கோவிலுக்கு பின்பக்கத்தில் உள்ள பற்றைக்குள் குறித்த மாட்டின்



தலை, தோல், எலும்புகள் மீட்கப்பட்டன. விவசாயி நாணய கயிறு மற்றும் நிறத்தை வைத்து இறைச்சியாக்கப்பட்டது தனது மாடு என அடையாளம் காட்டியுள்ளார்.

ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளை தீவகத்திலும் யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளிலும் பொலிஸ், இராணுவ சோதனைகள் தீவிரம் பெற்றிருந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் வசிக்கும் சிலர்தான் மாட்டை திருடி இறைச்சியாக்கி இருக்கலாம் என்று அந்தப் பகுதி விவசாயிகள் சந்தேகம் தெரிவித்தனர். தங்கள் பிரதேசத்தில் இப்படியான நிகழ்வுகள் இனியும் இடம்பெறாத வண்ணம் உரிய அதிகாரிகள்,பொலிஸார்கண்காணிக்கவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-த)

# பதநீரைப் போத்தலில் அடைப்பதற்கு திட்டம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.25**

**ஊரடங்கு நேரத்தில் சீவல் தொழிலாளர்களினால் சேகரிக்கப்படும் பதநீரை போத்தலில் அடைப்பதற்கான வேலைத்திட்டங்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்று யாழ் மாவட்டச் செயலர் க. மகேசன்தெரிவித்தார்**

யாழ்ப்பாண மாவட்டத்திற்குட்பட்ட பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமா சம் பனை அபிவிருத்தி சபை மற்றும் கலால் திணைக்களம் , சுகாதார பரிசோதகர்களுடன் நேற்று கலந் துரையாடல் ஒன்று இடம்பெற்றது. கலந்துரையாடலின் முடிவில் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட் டன. அந்தத் தீர்மானங்கள் தொடர் பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஊரடங்கு நேரத்தில் சகல தவற ணைகளும் மூடப்பட வேண்டும்



என்ற நிலை காணப்படுவதால் சீவல் தொழிலாளர்கள் சேகரிக்கப் படும் பதநீரை விற்பனை செய்ய முடியாதுள்ளது. சீவல் தொழிலாளி கள் எதிர்நோக்கும் பிரச்சினைக ளுக்கு தீர்வு காணும் முகமாக இன் றைய தினம் (நேற்று) குறித்த கூட் டம் இடம் பெற்றிருந்தது. ஊரடங் குச்சட்டம் நீக்கப்படும் வரை சீவல் தொழிலாளர்களால் சேகரிக்கப்ப டும் பதநீரை அந்தந்த பிரதேசங்க ளில் உள்ள சங்கங்கள் பெற்று அவர்கள் அதனை போத்தலில் அடைக்கவுள்ளதோடு, மிகுதிப் பத நீரை மதுசார தயாரிப்புக்காக கலால் திணைக்களத்தினிடம் ஒப்படைப்ப தாக தீர்மானிக்கப்பட்டது. ஊரடங்கு வேளையில் பதநீர் கொண்டு செல் வதற்கான போக்குவரத்துக்குரிய அனுமதிகள் தொடர்பிலும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது குறித்த அனும திகள் வரையறையுடன் மேற்கொள் ளப்படும் - என்றார். (ப)

# முஸ்லிம்கள் நாட்டின் அடிமைகள் என்பதுதான் அரசின் நிலைப்பாடு

## ரவூப் ஹக்கீம் காட்டம்

கொழும்பு, ஏப்.25

கொவிட்19 தொற்றினால் இறந்தவர்களின் சடலங் களை நல்லடக்கம் செய்வது தொடர்பில் நாங்கள் கதைக்கும் விடயங்கள் அரசாங்கத்தின் காதுக ளுக்குள் செல்வதில்லை. நாங்கள் அமுல்படுத்து கின்ற சட்டங்களுக்கு முஸ்லிம்கள் அடிமைகளாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங் கம் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

கொவிட்19 தொற்றினால் இறந்தவர்களின் சடலங் களை நல்லடக்கம் செய்வது தொடர்பில் ஊடகமொன் றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். இது குறித்த அவர் மேலும் தெரி வித்ததாவது;

அரசியல்வாதிகள் மட்டுமல்ல, மருத்துவ துறையி லுள்ள சிரேஷ்ட பேராசிரியர்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்கள். உலக சுகாதார ஸ்தாபனம் என்ன கூறினாலும், நாங்கள் எங்கள் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளப் போவ தில்லை என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள் ளது. வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடலிலிருந்து வேறொரு நபருக்கு பரவும் அபாயம் உள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், உலக சுகாதார ஸ்தாபனம் முதல் அனைத்து தரப்பினரும் வைரஸ் ஒன்றுக்கு உயிரிழந்த சடலத்தில் வாழமுடி யாது என கூறுகின்றன.

உயிர் வாழ்கின்ற உடலிலேயே வைரஸ் உயிர்வாழும். பக்றீரியாக்களுக்கு மாத்திரமே சடலத்தில் வாழமுடி யும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார் கள். உலக சுகாதார ஸ்தாபனம் சடலத்தை புதைப்ப தற்கு சில கட்டுப்பாடுகளை மாத்திரமே விதித்துள்ளது. உலகிலுள்ள நூற்றுக்கணக்காக நாடுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை ஏற்று செயற் படுகின்றன. ஆனால், இலங்கை மாத்திரமே சட லத்தை எரிக்கின்றது. தங்களுக்கென ஒரு சட்டத்தை உருவாக்கிக்கொண்டு பின்பற்றுகின்றனர்.

முஸ்லிம்களை புண்படுத்த வேண்டும் என்பதற்காக இதனை அரசாங்கம் செய்கின்றது. இதில் கட்டாயம் உள்நோக்கம் இருக்கின்றது. நாங்கள் அமுல்படுத்து கின்ற சட்டங்களுக்கு முஸ்லிம்கள் அடிமைகளாக இருக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப் பாடு. முஸ்லிம்களை தண்டிக்கும் ஒரு செயற்பாடு. சர்வாதிகார முறையில் இந்த விடயத்தை அரசாங்கம் செய்து வருகின்றது. இதற்காக நாங்கள் சட்டத்து றையை நாடமுடியும்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்தை நாடமுடியும். நீதிமன்றத்தை நாடினாலும், பல மாதங்கள் இந்த வழக்கு தொடரும். அவசரமாக தலையீடு செய்ய வேண்டும் என நீதிமன்றத்திடம் கேட்கலாம். பேச்சு வார்த்தை மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்றலாம் என்ற எண்ணத்திலேயே நாங்கள் முயற் சித்தோம். நாங்கள் இதுவரை நீதிமன்றத்தை நாட வில்லை. ஆனால், இறந்த 7 பேரில் 3 பேர் முஸ்லிம் கள். 3 பேரையும் எரித்துவிட்டார்கள். இந்த விடயம் மிக மோசமாக முஸ்லிம் மக்கள் மனங்களை பாதித் துள்ளது. இந்த விடயம் தொடர்பில் நீதித்துறையை நாடுவதற்கான எண்ணங்களும் உள்ளன. அரசாங் கத்தை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரலாம் என்ற முயற்சிதான் நடந்து கொண்டிருக்கின்றது.

புதைக்கலாம் என அரசாங்கம் கூறினால், நாட்டி லுள்ள 20 மில்லியன் பௌத்த மக்களும் வீதிக்கு இறங்கி போராடுவார்கள் என்ற கதையை இப்போது வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் நினைப்பதுதானே சட்டம். முல்லைத்தீவில் ஒருவரை மயானத்தில் புதைக்கக்கூடாது என நீதிமன் றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், பௌத்த பிக்குகள் சிலர் அங்கு சென்று நீதிமன்ற சட்டத்தை மீறி பலவந்தமாக அதை செய்தார்கள். தமக்கு தேவை யான விதத்தில் மக்களை தூண்டிவிட்டு, குளிர்காயும் அரசாங்கம் ஒன்றே தற்போது நாட்டில் உள்ளது. அச் சுறுத்தல் பாணியிலேயே அனைத்து விடயங்களும் நடக்கின்றன - என்றார். (ப)

## சிறுபோக விதைப்பு

வவுனியா,ஏப்.25

வவுனியாவில் சிறு போக விதைப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெ டுத்துவருகின்றனர். வவுனியா மாவட்டத்தில் 4ஆயிரத்து 283.3 ஏக்கர் பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள் ளதாகவும், ஆயிரத்து 328 ஏக்கர் பரப்பி லான நெல் நிலங்களில் ஏனைய பயிர்களும் பயிரிடப்பட வுள்ளதாகவும் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார். (ப-110)



# தொழில் முயற்சிகளை மாற்றி அமையுங்கள்

## யாழ். தொழிற்றுறை மன்றம் வடக்கிலுள்ளவர்களிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கிலுள்ளதொழில்முயற்சியாளர்கள் தற்போதுள்ள சூழ்நிலைக்கமைய தமது தொழில் முயற்சிகளை மாற்றியமைக்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளார், யாழ்ப்பாணம் தொழிற்றுறை மன்றத் தலைவர் விக்னேஷ்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுநடத்திய ஊட கவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையா னது இலங்கையில் மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்ப டுத்தியுள்ளது. வடக்கைப் பொறுத்தவ ரைக்கும் புதியதொழில் முயற்சியாளர் கள் தற்பொழுது உருவாகிக் கொண்டு வருகின்றனர். அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதால் அவர்களின் முயற்சிக ளுக் குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

எனினும், அவ்வாறான முயற்சியாளர் கள் தற்போதைய சூழ்நிலையில் எவ்வா றான உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமாக தமது உற்பத்திகளை மக்கள் மத்தியில் சேர்ப்பிக்க முடியும்? என்பதை ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

ஜனாதிபதி தொழில் முயற்சிகளுக்காக பெறப்பட்ட கடன்களை செலுத்த வேண் டிய காலப் பகுதியையும் நீடிப்பு செய்தி ருப்பது நாங்கள் அறிந்ததே. அதே போல் யாழ்ப்பாணத்திலுள்ள முயற்சியா ளர்கள் தமது பதிவுகளை எமது மன்றத் தின் ஊடாகப் பதிவுசெய்து கொள்ளுமா றும் அரசால் இழப்பீடு வழங்கப்படுமே யானால் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (த-111)

# நடவடிக்கை எடுக்காவிடில் தொழிற்சங்க போராட்டம்

கொழும்பு, ஏப். 25

கம்பஹா மாவட்ட போதனா மருத்து வமனை மருத்துவர் மீது தாக்குதல் மேற்கொண்டவருக்கு பிணை வழங்கியிருப்பதால் மருத்துவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளது. அதனால் சந்தேக நபரை மீண்டும் கைது செய்யவேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்வோம் என்று அரசமருத்துவ சங்கத்தின் கம் பஹா கிளை தெரிவித்தது.

அந்த மருத்துவமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அருண முனசிங்க தெரிவித்ததாவது:

இந்த மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உயி ரிழந்தமையை அடிப்படையாகக் கொண்டு அவரின் புதல்வர் ஆத்தி ரமடைந்து மருத்துவர் மீது தாக்கு தல் மேற்கொண்டுள்ளார். தாக்கிய வரை பொலிஸார் கைதுசெய்து கம்பஹா நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது பிணை வழங்கப்பட் டுள்ளது.

தாக்குதலுக்கு ஆளான மருத்துவர் மன அழுத்தத்துக்கு உள்ளாகி யுள்ளார்.

சம்பவம்தொடர்பாக உடனடியாக நட வடிக்கை எடுக்காவிட்டால் தொழிற் சங்கப் போராட்டத்துக்கு செல் வோம்.- என்றார். (த)

# இந்தியாவிடமிருந்து குறுகியகால கடனை பெறுவதற்கு அரசு முடிவு

கொழும்பு, ஏப்.25
நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் கொண்டு குறுகியகால கடனாக இந்தியாவிடம் இருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதற்கான உடன்படிக்கையை செய்துகொள்ள அமைச்சரவை அனுமதியும் பிரதமரினால் பெறப்பட்டுள்ளது என்று அமைச்சரவை ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் தெரிவித்ததாவது;
இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சி இப்போது பதிவாகியுள்ளது. சகல நாடுகளின் பொருளாதாரத்திலும் இது தாக்கத்தை செலுத்தியுள்ளதுடன் ஏற்றுமதி, இறக்குமதி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள காரணிகளை கருத்தில் கொண்டு சகல நாடுகளின் ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டுள்ளது.
ஒரு நாட்டுக்கு மட்டும் தீர்வு காணக்கூடிய சூழல் இல்லாத நிலைமையே உருவாகியுள்ளது. எமது நாட்டை எடுத்துக் கொண்டாலும் சுற்றுலாத்துறை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது,
விமானநிலையம் மூடப்பட்டுள்ளது. பிரதான ஏற்றுமதிகளின் கேள்வி குறைந்துள்ளதால் சாதாரணமாக எமக்கு வரக்கூடிய ஏற்றுமதி வருமானம் குறைவடைந்துள்ளது. தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ள காரணத்தினால் அதன் மூலமாக கிடைக்கும் வருமானமும் வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டில் இருந்து வெளியேறும் நிதியை தடுக்கும் விதத்தில் அரசாங்கம் பல தீர்மானங்களை முன்னெடுத்துள்ளது. அனாவசியமான இறக்குமதிகள், சொகுசு பொருள்களின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன. ஏனைய இறக்குமதிகளுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்தியை பலப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் குறுகியகால தேவையை கருத்தில் கொண்டு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணத்தை நாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் சார்க் நாடுகளின் அனுமதியுடன் இந்தியாவிடம் இருந்து குறுகியகால கடன் தொகையை பெற்றுக்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது -என்றார். (ப)

# உலகில் கொரோனா இப்போது அழியாது

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25
**கொரோனா எனும் கொவிட் – 19 தொற்று நோய் உலகில் நீண்ட காலத்துக்கு இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதானொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார்.**

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து காணொலி மூலம் ஊடக சந்திப்பில் பேசியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். மேற்கு ஐரோப்பாவில் கொரோனா தொற்று நிலையாக இருப்பதாக அல்லது குறைந்து வருவதாக குறிப்பிட்ட அவர், ஆபிரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகிய வலயங்களில் நோய்த் தாக்கம் குறைவாக உள்ளபோதிலும் அதிகரித்துச் செல்லக்கூடிய நிலை இருப்பதாகவும் அந்தக் காணொலியில் தெரிவித்தார். (ப)

# வரப்பிரசாதங்களை பெறுவதற்கே நாடாளுமன்றத்தை கூட்ட முயற்சி

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.25
கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதன் மூலம் கடந்த இரு மாதங்களாக கிடைக்கப் பெறாமலுள்ள சம்பளம், கொடுப்பனவுகள் உள்ளிட்ட வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதே ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் நோக்கமாகும் என்று பிவிதுரு ஹெலஉருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கலைக்கப்பட்ட நாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான இரு சந்தர்ப்பங்கள் மாத்திரமே அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் முதலாவது அரசியலமைப்பில் 155 ஆவது உறுப்புரையாகும். அதில் ஜனாதிபதியால் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்படுமானால் அவசரகால சட்டத்தை பிறப்பிக்கும் அறிவித்தலே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான அறிவித்தலாக அமையும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கொரோனா ஒழிப்பிற்காக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறார்.
எனவே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது அவசியமற்றது. அவ்வாறு அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட மாட்டாது என்பதையும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவசர காலச் சட்டத்தை பிறப்பிக்காது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டும் சட்டரீதியான அதிகாரம் ஜனாதிபதிக்கு எந்த சந்தர்ப்பத்திலும் கிடையாது. மாறாக இந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்று கூறுபவர்கள் அது பற்றி அரசியலமைப்பில் எந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எமக்கு தெளிவுபடுத்துமாறு கோருகின்றோம்.
இரண்டாவது சந்தர்ப்பம் அரசியலமைப்பின் 70 உறுப்புரையில் (7) ஆம் உப உறுப்புரையாகும். அதில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டும் வகையில் அவசர நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதிக்கு தோன்றினால் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியும். உண்மையில் தற்போதுள்ள நிலைமையில் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமானால் வைரஸ் ஒழிப்பிற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஏதேனும் சட்ட சிக்கல் காணப்பட்டிருக்க வேண்டும்.
நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்பு கட்டளைச் சட்டம், மக்கள் பாதுகாப்பு சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம், அனர்த்த முகாமைத்துவ சட்டம் உள்ளிட்டவை தொடர்பாக நாடாளுமன்றத்தில் இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் வைரஸ் ஒழிப்பிற்கு போதுமானவையாகவுள்ளன என்று ஜனாதிபதி எண்ணுகின்றார். தேவையான அனைத்து சட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் ஏன் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோருகின்றனர் - என்றார். (ப)

# மாணவர்களிடையே ஆக்கத்திறன் போட்டி

கிளிநொச்சி, ஏப்.25
இன்றைய இடர் நிறைந்த காலகட்டத்தில் வீடுகளில் இருந்தவாறே பயிலும் மாணவர்களைக் கருத்தில் கொண்டு, சிவனருள் கல்வி நிறுவனம், உலக சிறுவர் நலன் காப்பகம், கல்வி பிரிவு ஆகிய அமைப்புகள் இணைந்து நாடு தழுவிய அளவில் ஆக்கத்திறன் போட்டிகளை நடத்தவுள்ளன.
போட்டியில் கலந்து கொள்வதற்கு கட்டணம் எதுவும் இல்லை. தாயகத்தில் வாழும் மாணவர் எவரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
கட்டுரை, ஓவியம், கவிதை, நாடகம், சிறுகதை உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டியின் தலைப்பு விவரங்களை உரியவர்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.
ஆக்கங்களை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிகளுக்கு நேரடியாகவோ அல்லது முகவர்களிடமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்க முடியும். ஆக்கங்களை கையளிக்கும் இடங்களும், இணைப்பாளர்கள் தொலைபேசி இலக்கங்களும் வருமாறு:

**அம்பாறை, மட்டக்களப்பு**
ஜெனார்த்தனன் மாணிக்கமடு 0775368554
வாமதேவன் அக்கறைப்பற்று 0774210583
காளிதாசன் 0766340689
அனுசியா 0777561664
**மலையகம்**
பத்மநாதன் 0771311442
**திருமலை மாவட்டம்**
குணம் 0755776027, தர்சினி 0767018620
**வவுனியா**
செந்தீபன் 0777079804
லோகிதாசன் 0771782396
**மன்னார்**
கஜேந்திரன் 0779029664
சிவனருள் இல்லம் 0232050804
**முல்லைத்தீவு**
சந்திரகுமார் 0772038101
சத்தியவாணி - 0772403431
இசைஞானவதி - 0773263082
வாகீசன் 0766688429
புஸ்பகுமார் 0772247744
தவரூபி 0770417203
**கிளிநொச்சி**
கினோசினி - 0770480603
யமுனா 0774637432
கிளிநொச்சி சிவனருள் உற்பத்திமையம் உருத்திரபுரம் உலக சிறுவர் நலன்காப்பக தலைமைப்பணிமனை மாங்குளம்
**யாழ்ப்பாணம்**
றஞ்சித் 0777281879
கமலமூர்த்தி - 0773144593
சத்தியேந்திரா - 0773450042
கிளிநொச்சி சிவனருள் உற்பத்திமையம் உருத்திரபுரம், உலக சிறுவர் நலன் காப்பக தலைமைப் பணிமனை ஏ9 வீதி மாங்குளம், சிவனருள் இல்லம் திருக்கேதீஸ்வரம் மன்னார்,
சிவனருள் இலவச கல்வி நிலையம் தபால்பெட்டி சந்தி வீதி திருநெல்வேலி, இளந்தளிர் இலவச கல்வி நிலையம் முத்தையன்கட்டு முல்லைத்தீவு, இளந்தளிர் இலவச கல்வி நிலையம் இளங்கோபுரம் விசுவமடு, இளந்தளிர் இலவச கல்வி நிலையம் அக்கறைப்பற்று கோளாவில் அம்பாறை, இளந்தளிர் இலவச கல்வி நிலையம் மாணிக்கமடு அம்பாறை,
இளந்தளிர் இலவச கல்வி நிலையம் நீனாக்கேணி பாட்டாளிபுரம் திருகோணமலை, சிவனருள் இலவச கல்வி நிலையம் ஒலுமடு நெடுங்கேணி, சிவனருள் இலவச கணினி நிலையம் பிரதானசந்தி நெடுங்கேணி, அம்மன் மகளிர் இல்லம் அக்கறைப்பற்று அம்பாறை, சிவனருள் பவுண்டேசன் அக்கறைப்பற்று அம்பாறை ஆகிய முகவரிகளுக்கும் அனுப்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சஜித் அணிக்கு வேட்டு வைக்க ரணிலின் ஆட்டம் ஆரம்பம்!



**கொழும்பு, ஏப்.25**

**சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை நீக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியின்யானைச்சின்னத்தின்கீழ்போட்டியிட்டு வெற்றிபெற்று தற்போது வேறு கட்சிகளில் இணைந்துள்ள உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்பட்டு, கட்சியிலிருந்து அவர்கள் நீக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றுள்ள முக்கிய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுத்தேர்தலில் யானைச் சின்னத்தின்கீழ் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்துள்ளது. அத்துடன், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் தொலைபேசி சின்னத்தின்கீழ் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளது. இதனால் இரு அணிகளுக்குமிடையில் கடந்தகாலங்களில் கடும் சொற்போர் மூண்டிருந்தது. அதே வேளை, பதவிபறிபோய்விடும் என்ற அச்சத்தால் சஜித் பக்கம் உள்ள சில உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் ரணில் பக்கம் சாயக் கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப-44)

# வளாகத்தைத் திறக்க முன் தொற்று நீக்கி விசிறுங்கள்

*உள்நாட்டலுவல்கள் அமைச்சு பணிப்பு*

வளாகத்தை மீண்டும் திறப்பதற்கு முன்பு கிருமி நீக்கி விசிறுமாறு பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், அரச நிறுவனங்களில் தனியார் துறையினர் சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுத்து வருவது அரச ஊழியர்களுக்கு தேவையற்ற ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அதனைத் தடுக்கும் வகையில் அரச ஊழியர்களையே சுத்திகரிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறும் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளதாவது;

அரசு நிறுவனங்களுக்குள் நுழையும்போது வளாகத்தின் நுழைவாயிலில் சுகாதார வசதிகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். அரசு நிறுவனங்களின் சுகாதார சேவையை உறுதி செய்வதற்காக தெர்மோமீற்றர்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களையும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களையும் பணிக்கு அழைக்க வேண்டாம். தற்போதைய சூழ்நிலையில் தொடர்ச்சியாக பணியாற்றிய அதிகாரிகளுக்கு விடுப்பு வழங்க சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (து)

*பசில் தலைமையிலான*

# ஜனாதிபதி விஷேட செயலணி இனவாதத்தையே காட்டுகிறது

*டுவிட்டரில் மங்கள சாட்டையடி*

கொழும்பு, ஏப். 25

பசில் ராஜபக்ஷ தலைமையிலான விஷேட ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையின உறுப்பினர்கள் இடம் பெறாமை பெரும்பான்மையின இனவாதத்தையே காண்பிக்கிறது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சாடியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பசில் ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்பட்ட விஷேட ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை மேற்கோள்காட்டி தனது டுவிட்டரில் பதிவொன்றைச் செய்திருக்கும் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"பசில் ராஜபக்ஷவே! இது வெட்கத்திற்குரியதாகும். உங்களால் தலைமை தாங்கப்படும் 30 உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி செயலணி நாட்டின் பல்வகைமைத் தன்மையைப் பிரதிபலிப்பதாக இல்லை. அதில் ஒரு தமிழர் மாத்திரமே அங்கம் வகிக்கிறார். முஸ்லிம்கள் எவருமில்லை. தேசிய ரீதியிலான ஒரு நெருக்கடி நிலையிலும் கூட, பெரும்பான்மை இனவாதமே உத்தியோகபூர்வக் கொள்கையாக இருக்கிறது". என்று தெரிவித்தார் (து)

# கசிப்புடன் இருவர் விசுவமடுவில் கைது

கிளிநொச்சி, ஏப்.25

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்று தெரிவித்து பெண் உட்பட இரண்டு பேர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு குமாரசாமிபுரம் பகுதியில் வைத்தே இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 20லீற்றர் கசிப்பு பெண் ஒருவரிடம் இருந்தும், 10லீற்றர் கசிப்பு மற்றையவரிடம் இருந்தும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கசிப்பு விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது. (ப-113)

# கசிப்பு உற்பத்தி; பெண் கைது

கொடிகாமம், ஏப்.25

இயற்றாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த திங்கட்கிழமை குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 49 ஆயிரம் மில்லிமீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பனவும் மீட்கப்பட்டன. சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ-159)

# வன்புணர்வுக்கு உட்படுத்துகிறார்

*தனிமைப்படுத்த முற்படும்போது தந்தை மீது மகள் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப். 25

கொரோனா வைரஸ் தொற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 17 வயதுப் பெண், தன்னை தந்தை வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். இது பற்றி பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். நாவலப்பிட்டி பிரதேச தோட்டப் பகுதியில் இது இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புக்கு சென்றிருந்தபோது நாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. ஊருக்கு வரமுடியாமல் சிரமப்பட்டிருந்த நிலையில் அவர், நேற்று முன்தினம் நாவலப்பிட்டியிலுள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

அவருக்கு கொரோனா பரிசோதனை அவசியமாக இருக்கலாம் என்று கருதி அந்தப் பெண் தொடர்பில் பிரதேசவாசிகள் நாவலப்பிட்டி பொலிஸார் மற்றும் பொது சுகாதார பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

அதனால் அந்தப் பெண்ணை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் முகமாக பொலி ஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அதன்போதே, அந்தச் சிறுமி தந்தை மீது வன்புணர்வுக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

2017 ஆண்டு தான் 14 வயதுச் சிறுமியாக இருந்த போது தாய் சுகவீனம் காரணமாக உயிரிழந்துவிட்டார். அதனால் தனது தந்தை தன்னை வல்லுறவுக்கு உட்படுத்தினார். அன்றிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் வீட்டில் வைத்தும் வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றும் தந்தை தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரிடம் அந்தப் பெண் கூறியுள்ளார்.

அதன்படி கொழும்பிலுள்ள தந்தையைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (து)

# அமைச்சர்களின் சம்பளமும் 'கொவிட் 19' நிதியத்துக்கு

கொழும்பு, ஏப்.25

பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் தமது ஒருமாத கொடுப்பனவை "கொவிட் 19" கொரோனா வைரஸ் நிவாரண நிதியாக வழங்க அமைச்சரவையில் இணக்கம் கண்டுள்ளனர்.

அரச ஊழியர்கள் தமது கடமையை செய்கின்ற நேரத்தில் நாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார்.

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ள நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க கொவிட் 19 நிவாரண நிதியம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரச ஊழியர்கள் தமக்கான ஒரு மாத கொடுப்பனவுகளை கொவிட் 19 கொரோனா வைரஸ் நிவாரண நிதிக்கு வழங்குகின்றார்கள் என்றால் ஆட்சியாளர்கள் முதலில் மக்களுக்கான சேவையை முன்னெடுக்க தமது கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

அதற்கு அமைச்சரவைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்தார். அதற்கமைய பிரதமர் மற்றும் அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் தமது ஒருமாத கொடுப்பனவை கொவிட் -19 நிவாரண நிதிக்காக வழங்க தாம் முழுமையாக இணக்கம் தெரிவிக்கின்றோம் என்றும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

# மூடப்பட்டது பிரதேச சபை

கொழும்பு, ஏப். 25

வாரியபொல பிரதேச சபை அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று வாரியபொல பிரதேச சபைத் தவிசாளர் டீ.பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேச சபையின் பணியாளர் ஒருவர், கட்டுபொத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளரான, கடற்படைச் சிப்பாயுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (து)

# உதவி செய்யிறது ஒரு குற்றமா?



## சோமனும் சொக்கனும்

ஊரடங்கை எடுத்த கையோடை "வாடா போய்ப் புதினம் பாப்பம்" எண்டு சொக்கனையும் கூட்டிக் கொண்டு வட்டுக்கோட்டைச் சந்திக்கு வந்தன். அப்ப சொக்கன் "அண்ணை மாஸ்க் கட்டாமல் நான் வரமாட்டன். பொலிஸ்காரன் அடிப்பான்" எண்டு சொல்லிக் கொண்டு வரமாட்டன் எண்டிட்டான். உடனை என்ரை பழைய நாலு முழ வேட்டி ஒண்டு கிடந்தது. கரைப்பக்கமாகக் கிழிச்சு ஒரு துண்டை அவனிட்டைக் குடுத்தன். மற்றையதை நான் கட்டிக் கொண்டு வந்தன்.

சனம் றோட்டிலை நெருக்கமா, ஆளையாள் முந்திக் கொண்டு, சைக்கிள்களிலையும், மோட்டார் சைக்கிள்களிலையும், காரிலையும் அங்கையும் இஞ்சையும் அலைஞ்சு திரிஞ்சினம். அப்ப சொக்கன் கேட்டான் "சோமண்ணை... சோமண்ணை! உவைக்குக் கொரோனா தொத்தாதோ," எண்டு..!

"அதுகளைப் பிழை சொல்லாதை. அரசாங்கம் சொன்ன மாதிரி அவையள் மூண்டடி இடைவெளி விட்டுத்தானே போயினம். அதாலை அவை சமூக இடைவெளியை அரசாங்கம் சொன்னது மாதிரிச் சரியாக கடைப்பிடிக்கினம். அதாலை அவையளுக்குக் கொரோனா வராது" எண்டு நான் சொன்னன்.

"அப்ப அங்கை சாராயத் தவறணையைப் பார்" எண்டு கையைக் காட்டினான்.

"அட என்ன சனமடா! திருவிழாவாத்தான் கிடக்கு. வா கிட்டப் போய்ப் பாப்பம்" எண்டு சொக்கனையும் கூட்டிக் கொண்டு சாராயக் கடைக்குக் கிட்டப் போனன். சாராயம் வாங்க நிண்ட கூட்டத்திலை அண்டைக்குச் சமுர்த்தி வாங்க அடிபிடிப்பட்டுக் கொண்டு நிண்ட அரைவாசியும், உதவித் தொகை வாங்க வந்து நிண்டதுகளிலை கனக்கவும் நிண்டு தள்ளுப்பட்டுக் கொண்டிருந்ததைப் பாத்துக் கொடுப்புக்கை நான் சிரிக்க, உதிலை நிண்டு சிரிச்சால் உவங்களிட்டை அடி உதை வாங்க வேண்டிவரும் "வா சோமண்ணை போவம்" எண்டபடி என்ரை கையைப் பிடிச்சுச் சொக்கன் இழுக்கத் துவங்கிவிட்டான்.

சாராயம் வாங்க அடிபிடிப்பட்டவையள் , ஒரு போத்தல் இரண்டு போத்தில் எண்டில்லாமல் கடுதாசிப் பெட்டிக்கணக்கா வாங்கிக் கொண்டு போச்சினம்.

"உது எல்லாத்தையும் உவையள் தனிய வைச்சுக் குடிப்பினமோ," எண்டு சொக்கன் என்னட்டைக் கேட்டான்.

"எட விசரா. உப்பிடி எத்தினை வியாபாரம் நடக்குது தெரியுமோ? . மஞ்சள் கட்டி, பெருங்காயத் துண்டு, மூக்குக்கட்டிற கவசம். அது .. இது ... எண்டு எத்தினை புதுப்புது வியாபாரத்தை எங்கடை சனம் துவங்கியிருக்கினம். அதிலை உதுகும்...? " எண்டு நான் சொல்ல சொக்கன் வாயை ஆவெண்டவன்தான்........ மூடேல்லை.

இப்பிடிக் கதைச்சுக் கொண்டு நிக்க பொலிஸ் ஜீப் வந்து "சர்" எண்டு நிண்டுது. நாங்கள் நினைச்சம் சாராயத்துக்கு நிண்டவைக்குப் பூசை நடக்கப் போகுதெண்டு. பாத்தால் "தள்ளித் தள்ளி நிண்டு வாங்குங்கோ" எண்டு சொல்லிப் போட்டு அவங்களும் போட்டாங்கள்.

அப்பிடியே நடந்து இரண்டு பேரும் வாசிகசாலைப் பக்கம் போனம். அங்கை இரண்டு மூண்டு பேர் நிண்டு நிவாரணம் குடுக்கிறதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தினம். பாத்தால் எங்கடை முன்னாள் எம்பியும் நிண்டார். என்னைக் கண்டுவிட்டு "என்ன சோமண்ணை இஞ்சாலிப் பக்கம் எண்டார்".

"ஹி...ஹி.. சும்மா இவனுக்கு வேலை வெட்டி இல்லையாம்.

சந்திக்கு வந்து புதினம் பாப்பம் எண்டு கேட்டான், அது தான்....ஹி.." எண்ட என்னை "என்ன பொய் சொல்லிறியோ" எண்டதைப் போலை சொக்கன் முறைச்சுப் பாத்தான் . நான் முகத்தைத் திருப்பிப்போட்டன்.

"ஐயா உங்களை ஒண்டு கேப்பன். கோவிக்கக் கூடாது" எண்டு மெல்ல கதையைத் துவங்கினன்.

"போன கிழமை ரீவியிலை பாத்தனான். நீங்கள் சுன்னாகம் சதோஷாவிலை வாகனத்தை விட்டுச் சனத்துக்குப் போக வேண்டிய சாமான்களை ஏத்தி உங்கடை தொகுதிச் சனத்துக்குக் குடுத்து அரசியல் செய்தனியளாம். உண்மையோ?" எண்டு நான் கேட்டன்.

எம்.பி வழக்கமாச் சிரிக்கிறமாதிரிச் சிரிச்சுப் போட்டு "சோமண்ணை நீங்கள் உங்கடை மேளின்ரை கலியாண வீட்டுக்கு வாழைத்தார் ஏத்தவெண்டு என்ரை ஹன்டரைக் கேட்டனியளெல்லே. தராமல் விட்டனானே? பிறகு உங்கடை அயல் வீட்டுச் செத்வீட்டண்டு சாம்பல் கரைக்க பொலிஸ் அனுமதியும் எடுத்துத் தந்து வானையும் தந்தனானெல்லே? இல்லை எண்டனானே.

அது மாதிரித்தான் ஒரு தொண்டு நிறுவனம் மக்களுக்குக் குடுக்கவெண்டு தாங்கள் சதொசவிலை வாங்கின சாமான்களை ஏத்தி இறக்க என்ரை கொம்பனி வாகனத்தைக் கேட்டவை. குடுத்தனான். அது பிழையோ? என்ன சோமண்ணை..?" எண்டு ஒரு பிரசங்கத்தையே செய்திட்டுப் போட்டார்.

> கல்லை கல்லெண்டு பாத்தால் அது கல்லுத்தான். அதே கல்லைப் பிள்ளையார் எண்டு பாத்தால் பிள்ளையார்தான். சீனன் மறந்து போயும் புடலங்காயை வேண்டிக் கொண்டு போகப்பிடாது. உடனை எங்கடை சனம் சொல்லும் சீனன் பாம்பை வேண்டிக் கொண்டு போறான் சமைக்க எண்டு.

கல்லை கல்லெண்டு பாத்தால் அது கல்லுத்தான். அதே கல்லைப் பிள்ளையார் எண்டு பாத்தால் பிள்ளையார்தான். சீனக்காரன் மறந்து போயும் புடலங்காயை வேண்டிக் கொண்டு போகப்பிடாது. உடனை எங்கடை சனம் சொல்லும் சீனக்காரன் பாம்பை வேண்டிக் கொண்டு போறான் சமைக்க எண்டு.

உப்பிடித்தான் நான் ஒரு நாள் சந்தியிலை நிண்டாப்போலை ஒரு வடிவான மனுசி வந்து ஆரோ இடம்பெயர்ந்து வந்து இருக்கிற ஆளின்ரை விலாசம் கேட்டாள். அவளோடை இரண்டு நிமிசந்தான் நிண்டு கதைச்சனான்.

வீட்டை வாறன் மனுசிக்காரி மண்ணள்ளித் திட்டி ஒப்பாரி. அதுக்கிடையிலை ஆரோ ஒரு தறுதலை வந்து வீட்டை சொல்லிப் போட்டுப் போயிருக்குது "சோமண்ணரைத் தேடி மாவனெல்லையிலை அவற்றை "கீப்" வந்து நிக்கிதெண்டு"... மாவனெல்லையிலை நான் சுருட்டுக் கடையிலை சம்பளத்துக்கு நிண்டதைத் தெரிஞ்சதொண்டு தானே இதைச் செய்திருக்கு..?

அப்ப மற்றவை சொல்லுறதை உடனை விழுங்கினால் முழி பிதுங்கிச் சாக வேண்டியதுதான் ஆற அமர இருந்து யோசிக்க வேணும் என்ன? சொக்கா" எண்டன். ஆள் பிளந்த வாயை மூடேல்லை. ■

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)

- 4 விடைகள் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 2

பகுதி– II

ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.

நேரம்: 1 மணி 15 நிமிடம் பெயர்: ................................ . பாடசாலை: ................................................

**1. பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க**

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
கொத்துக் கொத்தாக மலர்ந்து பொலியும்
இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்.

பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழ்வுடன் கீதம் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்

i. மகிழ்ச்சியுடன் எனும் சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக
..........................................................................................

ii. அஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக
..........................................................................................

iii. இணைமொழியை இனங்கண்டு எழுதுக
..........................................................................................

iv. காலப் பெயர் ஒன்றை எழுதுக
..........................................................................................

v. அடுக்கு மொழி ஒன்றை எழுதுக
..........................................................................................

vi. எக்காட்சியினைக் காண வருமாறு அழைக்கப்படுகிறது?
.......................................................................................... (6 புள்ளி)

2. பின்வரும் சுருக்கக் குறியீட்டுக்கான விரிவினை எழுதுக.

இ.ரூ.கூ.- ..............................................................

(2புள்ளி)

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

திரும்பி, திருகோணமலை, திருநாவுக்கரசு, வந்தார், திங்கட்கிழமை, போய்
..........................................................................................
.......................................................................................... (2 புள்ளி)

**4. கீழே தரப்பட்டுள்ள சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. ஆனால் அவற்றின் முதல் எழுத்துக்கள் மாறியுள்ளன. சரியான சொல்லை ஆக்கிப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i. சாம்ரமின் - ............................................
ii. பாதிய புதை - ............................................
iii. றை தலைமு - ............................................
iv. லமா ம்றி - ............................................ (4புள்ளி)

5. தனிச் சொல்லை எழுதுக.

i. ஒன்று போல் இருக்கும் மற்றொன்று ............................................
ii. அறிஞர்கள் கூடி வாதிடும் களம் .................................. (2புள்ளி)

6. **பின்வரும் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.**

i. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
..........................................................................................

ii. அடியற்ற மரம் போல....
.......................................................................................... (2 புள்ளி)

7. **பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.**

முயல்கள் தோட்டத்துக்கு வந்தன.
.......................................................................... (1 புள்ளி)

8. **எதிர்ச்சொல்லை எழுதுக.**

இன்சொல் - ...................................................... (1 புள்ளி)

9. **சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i. நாளிதழ் நாளிதல்
ii குருதட்சனை குருதட்சணை (2புள்ளி)

10. கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான எழுத்துக்களைப் ( னகர, ணகர, நகர வேறுபாடு) பயன்படுத்தி நிரப்புக.

மா.....கள் தடாகத்திலுள்ள த...... .......ரை ந.....றாகப் பருகி மகிழ்ந்தன. (2புள்ளி)

11. **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக**

i. Bread - .................................. ii. Ship - ................... (2 புள்ளி)

12. பின்வரும் ஒவ்வொரு உருவுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i. ii



.........................



........................
(2 புள்ளி)

13. **தமிழ்க் கருத்தை எழுதுக.**

i. Who is this? ..................................................
ii. Standup .................................................. (2 புள்ளி)

14. பஹளொவ எனும் சிங்களச் சொல்லுக்குரிய எண் பெயரைத் தமிழில் எழுதுக.
.......................................................................................... (1 புள்ளி)


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்களுக்கு பால் வேண்டுமா?
.......................................................................................... (1 புள்ளி)

**பின்வரும் வினாக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16. விரித்து வைக்கப்பட்ட பேரகராதியொன்றின் வலப் பக்க எண் 1099 ஆகும். அடுத்த தாக விரிக்கும்போது வரும் பக்கங்கள் இரண்டினதும் இலக்கங்களை முறையே எழுதுக.


i. .................................... ii.................................

17.  இவ்வுருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகள் எத்தனை?
..................................................

18. புகையிரதம் ஒன்று பயணத்துக்காக எடுத்த நேரம் மூன்று மணித்தியாலம் 40 நிமிடங்கள். அது பயணத்தை ஆரம்பித்த நேரம் பி.ப.1.30 எனின் பயணத்தை முடித்த நேரம் யாது?
..........................................................................................

19. மூன்று தீக்குச்சிகளை மட்டும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மூன்றிலும் கூடிய பத்திலும் குறைந்த உரோமன் எண்களை எழுதுக.
..........................................................................................

20. உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணில் எழுதுக.



...........................

**பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து விடையளிக்குக.**

| பொருள் | அளவு | ரூபா | சதம் |
|---|---|---|---|
| அரிசி | 1kg | 140 | 00 |
| மா | 500g | 60 | 00 |
| சீனி | 1kg | 110 | 00 |
| சவர்க்காரம் | 1 கட்டி | 60 | 00 |

21. **ரூபாய் 1000 இற்கு வழங்கக் கூடிய பொருள்களையும் அவற்றின் அளவுகளையும் நிரப்புக.**

| பொருள் | அளவு | ரூபா | சதம் |
|---|---|---|---|
| அரிசி | 3kg | ........... | ......... |
| மா | ........ | 240 | 00 |
| சீனி | 2kg | .......... | ......... |
| சவர்க்காரம் | ........ | ............ | ........... |
| மொத்தம் | | 1000 | 00 |

22. மேற்படி வாங்கிய அரிசியினதும் மாவினதும் நிறையை கிராமில் தருக.

.........................................................................................

23. 4L 380 ML பாலினை 4 பாத்திரங்களில் சமமாக இடும்போது பாத்திரமொன்றில் அடங்கும் பாலின் அளவு யாது?

.........................................................................................

24. **பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.**

94 375 42 021 18 314

.........................................................................................

25. **அடுத்து வரும் எண்களை எழுதுக.**

1, 5, 25, 125, ......................, ...................



26. இக் கடிகார முகத்தில் காட்டும் முட்கள் காட்டும் நேரம் இன்னும் எவ்வளவு நிமிடத்தில் செங்கோணமாக முட்கள் அமையும் வண்ணம் காட்டி நிற்கும்?

.........................................................

27. ஒரு முட்டையின் விலை ரூபாய் 7.50 எனின் 14 முட்டைகளின் விலையைக் காண்க.

.........................................................................................

28. **எண் பெயரை எழுதுக.**

46,309 - ..........................................................................

29. **தரப்பட்ட எண்ணை விரித்து எழுதுக.**

57 040 = ...................... + .................+................+..............+........

(30புள்ளிகள்)

**30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பின்வருனவற்றுள் தண்டு மூலம் மட்டும் இனப்பெருக்கம் செய்யாத செடி.
1. சீமைக்கிளுவை 2. செவ்வரத்தை 3. திராட்சை 4. நெல்

31. பின்வருவனவற்றுள் அச்சு ஊடகம் எது?
1. தொலைபேசி 2. இணையம் 3. பத்திரிகை 4. ஃபக்ஸ்

32. பின்வருவனவற்றுள் மத்தள விமான நிலையம் அமைந்துள்ள மாகாணம் எது?
1. வடக்கு 2. தென் 3. மேல் 4. கிழக்கு

33. காந்தம் தொடர்பான கூற்றுக்களுள் **பிழையானது** எது?
1. காந்தத்தைப் பயன்படுத்தி திசையை அறியலாம்
2. ஒத்தமுனைக் காந்தங்கள் ஒன்றை ஒன்று தள்ளும்
3. காந்தம் இரும்பைக் கவரும்
4. காந்தம் எல்லாப் பொருள்களையும் கவரும்.

34. 'கட்டு மரத் தோணியிலே ஏலேலோ…' எனும் பாடலுடன் தொடர்புடைய தொழில்
1. விவசாயம் 2. மேசன் 3. தச்சு வேலை 4. மீன்பிடித்தல்

35. வித்து முளைப்பதற்குத் தேவையான காரணிகள்
1. வளி, நீர், வெப்பம்
2. வளி, வளமான மண், சூரியஒளி
3. நீர், சூரியஒளி, பசளை
4. வெப்பம், நீர், வளமான மண்

36. 
இக்குறியீடு உணர்த்துவது
1. யுனிசெவ்
2. ஐக்கிய நாடுகள் சபை
3. உலக உணவு ஸ்தாபனம்
4. சார்க் அமைப்பு.

37. பேருந்துகளில் ஆசனம் ஒதுக்கப்பட்டோர்
1. பணக்காரர் 2. நோயாளி 3. அங்கவீனர் 4. வைத்தியர்கள்

38. 

இவ் வீதிக் குறியீடு உணர்த்துவது
1. பேருந்துத் தரிப்பிடம்
2. வாகனம் நிறுத்துமிடம்
3. வாகனம் நிறுத்தத் தடை
4. நிறுத்துக.

39. 
இவ்விசைக் கருவியின் வகை
1. துளைக்கருவி
2 தோற்க் கருவி
3. நரம்புக்கருவி
4. கஞ்சற் கருவி.

40. ஹைறியா பெண்கள் பாடசாலையை ஸ்தாபித்தவர்.
1. கலாநிதி C.W.W. கன்னங்கரா 2. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3. கலாநிதி ரீ.பீ. ஜாயா 4. வண எஸ்.மஹிந்ததேரர்

41. இலங்கையில் பெருக்க மரம் காணப்படும் இடங்கள்
1. அனுராதபுரம், கண்டி 2. பொலன்னறுவை, காலி
3. காலி, அம்பாறை 4. மன்னார், நெடுந்தீவு

42. பின்வருவனவற்றுள் உணவு பழுதடைதலில் இயற்கைக் காரணியாக **அமையாதது**
1. தூசு படிதல் 2. மழை படுதல்
3. மனிதன் கவனமின்றி மூடாது விடுதல் 4. அதிக சூரிய ஒளிபடுதல்


43. பானம் தயாரிக்கப் பயன்படும் பழங்கள்
1. மாம்பழம், பொன்னாவரசு 2. நன்னாரி, பொன்னாவரசு
3. அம்பரல்லா, வெரலிக்காய் 4. வாழைப்பழம், வெள்ளரி

44. கடதாசிகளை மடித்து உருக்களை ஆக்குவது
1. கொலாஜ் 2. ஒரிகாமி 3. அல்பனா 4. மொசாயிக்

45. பின்வருவனவற்றுள் தொற்று நோய் எது?
1. நீரிழிவு 2. டெங்கு 3. இரப்பை அழற்சி 5குற்புண்

46. வேப்பம்பூவிலுள்ள இதழ்களின் எண்ணிக்கை யாது?
1. எட்டு 2. மூன்று 3. நான்கு 4. ஐந்து

47. "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்" எனும் ஒட்டுமொத்தக் கருத்தை உணர்த்துவது.

1. 
2. 
3. 
4. 


48. எமது நாட்டிற்கேயுரித்தான முலையூட்டி எது?
1. மள்புளுட்டா 2. மரநாய் 3. சிங்கம் 4. பண்டா

49. குறைவான அளவு நீர் அருந்தும் ஒருவருக்கு ஏற்படக் கூடிய தீங்கு **அல்லாதது**.
1. தோல் உலர்தல் 2. சிறுநீர் கழிக்கும்போது எரிவு ஏற்படல்
2. உதடுகள் உலர்தல் 4. சிறுநீரை வெளியேற்ற அதிக நேரம் தேவைப்படாது.

50. இலங்கையில் தேசிய மரபுரிமையாக மட்டுமன்றி உலக மரபுரிமையாகவும் கணிப்பு பெற்ற வழிபாட்டுத் தலம்
1. தலதாமாளிகை 2. சிங்கராஜவனம் 3. காலிக்கோட்டை 4. போதிமரம்

51. சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர் யார்?
1. ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா 2. வில்லியம் கோபல்லாவ
3. டீ.எஸ்.சேனநாயக்கா 4. கலாநிதி c.w.w.கன்னங்கரா

52. பின்வருவனவற்றுள் ஊனுண்ணி
1. ஒட்டகச்சிவிங்கி 2. வெட்டுக்கிளி 3. கரடி 4. சிறுத்தை



53. பாடசாலையில் உள்ள உபகரணங்கள், பொருத்திகள், தளபாடங்கள் முதலான பதிவுகள் அடங்கிய ஓர் ஏடு
1. சம்பவத்திரட்டுப் புத்தகம் 2. பொருட்பதிவேடு
3. வரவு இடாப்பு 4. பெறுகை ஏடு

54. ஒருவரின் உடல் வளர்ச்சி குன்ற ஏதுவாக இருப்பது
1. அயடீன் குறைபாடு 2. இரும்புச்சத்துக் குறைபாடு
3. விற்றமின் A குறைபாடு 4. புரதக் குறைபாடு

55. தேசப்படமொன்றில் அதிவேகப் பாதையைக் குறிக்கப் பயன்படும் நிறம்
1. கறுப்பு 2. ஊதா 3. நீலம் 4. சிவப்பு

56. துப்புரவு அற்ற நீரைப் பருகுவதால் பீடிக்கும் நோய்
1. தடிமன் 2. டெங்கு 3. குக்கல் 4. செங்கண்மாரி

57. சுவரைக் கட்டும்போது நிலைக்குத்து இயல்பைப் பேண உதவுவது

1. 
2. 
3. 
4. 

58. ஈரூடக வாழியாக **அமையாதது**
1. தவளை 2. தேரை 3. ஆமை 4. சலமந்தரா

59. பிராணிகளின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய மனித செயற்பாடு **அல்லாதது**
1. கொதிநீரை நிலத்தில் ஊற்றுதல்
2. மரங்களை வெட்டுதல்
3. இரசாயனப் பசளையிடல்
4. வாழிடம் அமைத்துக் கொடுத்தல். (30 புள்ளிகள்)

"சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தும் விடயங்களைப் பின்பற்றுவதால் ஏற்படும் பயன்கள்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இருத்தல் வேண்டும்)

i. ...........................................................................................
...........................................................................................
ii. ...........................................................................................
...........................................................................................
iii. ...........................................................................................
...........................................................................................

(06 புள்ளிகள்)

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் சனிக்கிழமைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்



மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட 500 குடும்பங்களுக்குப் பால்மாப்பொதிகள் வழங்கும் விசேட திட்டத்தில், இளவாலை ஜே.155 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 26 குடும்பங்களுக்கும், ஜே.156 பகுதியைச் சேர்ந்த 7 குடும்பங்களுக்கும் பால்மாப்பொதிகள் வழங்கப்பட்டன.(சு-222)



வரோட் அமைப்பின் ஏற்பாட்டில், வெளிநாட்டு இலங்கை வாழ் நலன்விரும்பிகள் மற்றும் நன்கொடையாளிகளின் நிதி அனுசரணையுடன், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 631 மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-222)



கைதடி இந்து வாலிபர் கழகத்தால், மீசாலை வடக்கு சுடரொளி சனசமூக நிலையச் செயலாளர் தனுசனின் ஏற்பாட்டில், ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் 90 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. மந்துவில் வடக்குப் பிரிவில் 11 குடும்பங்களுக்கும், இராமாவில் பிரிவில் 29 குடும்பங்களுக்கும், மந்துவில் கிழக்குப் பிரிவில் மந்துவில் றோ.க.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் 50 குடும்பங்களுக்கும் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-159)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி ஜே.432 கிராம அலுவலர் பிரிவில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு மருதங்கேணி சமுர்த்தி வங்கியினரால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. (சு-70)




மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்களால், இரண்டாம் தொகுதியினருக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.
அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பிரதிநிதி எஸ். கோகுலன், மாவட்ட ஊடக அதிகாரி வடிவேல் ஜீவானந்தன் உட்பட பல ஊடகவியலாளர்கள் பொதிகளை வழங்கினர். (சு-150)



வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தில், 53 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கானநிதியுதவியைவடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் வழங்கினார். (சு-222)



சுசீலன் பௌண்டேசனால், முல்லை மாவட்டத்தின் செம்மலை, கொக்குளாய், கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-222)



முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் நிதி உதவியில் வலி.தெற்குப் பிரதேசசபை உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ்குமாரால், அந்தணர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு)




தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வழங்கவென 400 அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. வேள்ட் விஷன் லங்கா மற்றும் எச்எஸ்பிசி வங்கி ஆகியவை இணைந்து பொதிகளை வழங்கின. (சு-9)



கிளிநொச்சி பொன்நகர் வேதாகுடியிருப்பில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. உருத்திரபுரம் சிவன் ஆலய பரிபாலன சபையின் தலைவரும், முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சு. பசுபதிப்பிள்ளை மற்றும் பரிபாலன சபை உறுப்பினர்களும் இணைந்து பொதிகளை வழங்கினர். (சு-105)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் குடும்பங்களுக்கான உலருணவு பொதிகள் கல்லூரி அதிபர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை பிரித்தானியா பழைய மாணவர் சங்கத்தினரும், தாயகம் மற்றும் புலம்பெயர் பழைய மாணவர்களும் வழங்கினர். (சு-63)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்



தேசிய சமாதானப் பேரவையின் நிதி அனுசரணையுடன், கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வவுனியா பூவரசங்குளத்தில் அமைந்துள்ள அருப்பே சிறுவர் அபிவிருத்தி நிலையம், செக்கட்டிபுலவு கிராமத்தில் அமைந்துள்ள பிறைற் சிறுவர் மேம்பாட்டு நிலையம், முருகனூர் தேவ அன்பு சிறுவர் இல்லம் மற்றும் எல்லப்பர் மருதங்குளம் சிவன் முதியோர் இல்லம் ஆகியவற்றிற்கு இரண்டு இலட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வவுனியா சர்வமத குழுவினரால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (ந-110)



ஜீவஊற்றுஅன்பின்கரம் எனும் அமைப்பு சுவிஸ் பேஸ்லேன்ட் மாநில மக்களின் நிதி உதவியில், வவுனியா மாவட்டத்தில் பெரிய புளியங்குளம், புதியநகர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தம்பனை, கரிப்பட்ட முறிப்பு, நீதிபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கி வைத்தது. (ந-222)




'கல்வி கனைக்சன் கனடா' எனும் நிறுவனம், விசுவமடு கிழக்கு, நெத்தலியாறு கிராமங்களை உள்ளடக்கி மிகவும் பாதிப்புக்குள்ளான 100 முன்னாள் போராளிகள் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டன. (ந-22)



கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவின் ஒன்பது கிராம சேகவர் பிரிவில், 2027 குடும்பங்களுக்கு நோன்பை முன்னிட்டு, சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பினால் உலர் உணவு பொதிகள் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ந-150)



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில குடும்பங்களுக்கு ஒரு தொகை உணவுப் பொருள்கள் சமூகம் ஊடக வலையமைப்பினரால் வழங்கி வைக்கப்பட்டன. (ந-40)



முள்ளியவளை, கணுக்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த முதியவர்களுக்கு, லண்டனில் வசிக்கின்ற கந்தப்பிள்ளை திலீபன் மற்றும் திவாகரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன், நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ந-222)

## தாய் தேசம் அறக்கட்டளையின் உதவிகள்

கொடிகாமம், ஏப்.25

தென்மராட்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கைதடி, கல்வயல் ,சரசாலை, மீசாலை, சாவகச்சேரி, மிருசுவில், நாவற்குழி, விடத்தற்பளை ஆகிய பிரிவுகளில் வசிக்கும் கர்ப்பவதிகளுக்கு பிரசவ அறைக்குத் தேவையான பொருட்களை தாய் தேசம் அறக்கட்டளை அமைப்பின் ஊடாக மறவன்புலவு பிரபாகரன் மற்றும் அவரது நண்பர்களும் இணைந்து வழங்கி வைத்தனர் (ந-159)



'வல்வெட்டித்துறை, வல்வை 21 நண்பர்கள்' அமைப்பின் நிதி உதவியில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் ஈரளகுளம் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் 32 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ரூ.2000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ந-150)



திருகோணமலை மாவட்டத்தின் மொரவேவா பிரதேசத்திற்குட்பட்ட நொச்சிக்குளம் கிராமத்தில் உவர்மலையைச் சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை நாகலிங்கம் நினைவாக வழங்கப்பட்டிருந்த நிதி உதவியில், திருகோணமலை கல்வி பொருளாதார அமைப்பின் ஊடாக, 10 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளீட்ட 11 குடும்பங்களுக்கும், சாந்திபுரம் கிராமத்தில் 8 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளிட்ட 09 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ந-222)



சாவகச்சேரி கற்குளி பாரதி படிப்பகத்தினர், படிப்பக சூழலில் உள்ள கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, பெருங்குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் 350 குடும்பங்களுக்கு, புலம் பெயர் உறவுகளால் வழங்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட உலர் உணவுப் பொருள்களையும், படிப்பக முன்னாள் அங்கத்தவரும், யாழ்ப்பாணம் சாரங்கா நகைமாட உரிமையாளருமான அமரர் ப.கிருபாகரனின் நினைவாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாவினை 50 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவிகளையும் வழங்கியுள்ளனர். (ந-9)

# கொரோனாவுக்குத் தடுப்பூசி விரைவில் கண்டுபிடிப்போம்

## இறுதிக் கட்டத்தில் உள்ளோம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பெருமிதம்



வொஷிங்டன், ஏப்ரல் 25

**கொரோனாவுக்குத் தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் கட்டத்தில் அமெரிக்கா உள்ளது என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.**

உலக அளவில் கொரோனா தாண்டவமாடி வருகின்றது. அமெரிக்காதான் மிகமிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடாக உள்ளது. அங்கு 9 லட்சம் மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 ஆயிரம் உயிரிழப்புக்கள் அங்கு பதிவாகிக் கொண்டுள்ளன. ஊரடங்கு காரணமாக அமெரிக்காவின் பொருளாதாரம் மிகப்பெரும் சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையிலேயே கொரோனாவுக்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் இறுதிக்கட்டத்தில் உள்ளோம் என்று தெரிவித்துள்ளார் ட்ரம்ப்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் ஏராளமான மிகச்சிறந்த அறிவாளிகள் ஈடுபட்டு வருகிறார்கள். நாம் கொரோனா வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் கட்டத்தை நெருங்கிவிட்டோம். கண்டுபிடித்து விடுவோம்' என்றார். (ம)





# அமெரிக்கா தாக்கினால் பதிலடி கொடுக்கப்படும்!

## ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரோன், ஏப். 25

அமெரிக்கக் கப்பல்களை அச்சுறுத்தும் வகையில் ஈரானின் கப்பல்கள் செயற்பட்டால் அந்தக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும்படி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ள நிலையில், 'அமெரிக்கா தாக்கினால் நிச்சயம் தக்க பதிலடி கொடுக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார் ஈரானின் அதிபர் ரவுகானி.

அமெரிக்க கடற்படையினர் ஈரானை ஒட்டிய பாரசீக வளைகுடா கடற்பகுதியில் உள்ள சர்வதேச கடற்பரப்பில் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு பாரசீக வளைகுடா கடற்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 6 அமெரிக்கக் கடற்படைக்கு சொந்தமான கப்பல்களை கடந்த 15ஆம் திகதி ஈரானின் கடற்படை சுற்றிவளைத்தது. இதையடுத்து, 'இவ்வாறான அத்துமீறல் நடவடிக்கைகள் ஈரானால் மேற்கொள்ளப்பட்டால் தாக்குதல் நடத்துங்கள்' என்று ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார். இதையடுத்தே அமெரிக்கா தாக்கினால் ஈரானும் தாக்கும் என்றுள்ளார் ரவுகானி.

ஈரானுக்கு எந்த நாடும் எச்சரிக்கை விட முடியாது. எம்மை அச்சுறுத்தும் வகையில் அமெரிக்கா செயற்பட்டால் கட்டாயம் பதிலடி கொடுப்போம். அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தரைமட்டமாகும் என்று ரவுகானி மேலும் தெரிவித்தார். (ம)

# ஜேர்மனியின் தடுப்பூசி பரிசோதனைக்கு அனுமதி



பெர்லின், ஏப். 25

கொரோனாத் தொற்றுக்கு ஜேர்மனி கண்டுபிடித்த தடுப்பூசி பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டுபிடிப்பதில் ஜேர்மனியின் பயோன்டெக் நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனம்தான் கொரோனாவுக்குத் தடுப்பூசியைக் கண்டுபிடிப்பதில் முதன்முதல் கடும் முனைப்புடன் ஈடுபட்ட நிறுவனமாக உள்ளது. இந்தத் தடுப்பூசியைப் பரிசோதிக்க ஜேர்மனி அரசு அனுமதி வழங்கியுள்ளது. (ம)



# இந்தியாவில் நேற்றுமுன்தினம் 1,700 கொரோனா நோயாளர்கள்

புதுடெல்லி, ஏப். 25

இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் உச்சமடையத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் ஆயிரத்து 700 பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் பெரும் பாதிப்பைச் சந்திக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் உள்ளது. மும்பை புறநகர்ப் பகுதிகள், சேரிகள் என்று பரவலாக அங்கு கொரோனா அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மட்டும் ஆயிரத்து 700 பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இந்தியாவில் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தைத் தொட்டுள்ளது. ஒட்டுமொத்த இறப்பு எண்ணிக்கை 730ஆக அதிகரித்துள்ளது. (ம)

# நலமுடன் கிம் ட்ரம்ப் தகவல்



பியாங்யாங், ஏப். 25

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் நலமுடன் உள்ளார் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

வடகொரிய அதிபர் கிம் குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை. சி.என்.என் ஊடகம் தவறான அறிவிப்புகளை வெளியிடுகிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி அவர் உடல்நிலை குறித்த தகவல் பொய். அந்த ஊடகம் கடந்த கால ஆதாரங்களை வைத்து செய்தி வெளியிட்டுள்ளது. கிம் உடல்நிலையில் எந்த பிரச்சினையும் இல்லை - என்றார். (ம)

# உலக சுகாதார அமைப்புக்கு சீன அரசால் கூடுதலான நிதி

பீஜிங், ஏப். 25

உலக சுகாதார அமைப்புக்கு சீன அரசால் கூடுதலான நிதி வழங்கப்பட்டுள்ளது. 30 மில்லியன் டொலர்களை சீனா கூடுதலாக வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான செயற்திட்டங்களை உலக சுகாதார அமைப்பு காத்திரமான வகையில் மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்திய அமெரிக்க அதிபர் ட்ரம்ப், உலக சுகாதார நிறுவனத்துக்கு அமெரிக்கா வழங்கிய நிதியை நிறுத்துமாறு உத்தரவிட்டார். இதற்கு சீனா, ஐ.நா கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தன. இதையடுத்து பெரும் நிதிநெருக்கடியால் உலக சுகாதார அமைப்பு திண்டாடியது. இந்த நிலையில் சீனா வழமையாக வழங்கும் நிதியை விட கூடுதலாக 30 மில்லியன் டொலர்களை உலக சுகாதார அமைப்புக்கு வழங்கியுள்ளது. (ம)



# இந்தியாவுக்காக டோனி விளையாடமாட்டார்: அவரது சகாவான ஹர்பஜன் சிங் தெரிவிப்பு




புதுடெல்லி, ஏப். 25
இந்திய அணிக்காக டோனி இனி விளையாட மாட்டார். ஆனால் அடுத்த சில ஐ.பி.எல் தொடர்களில் அவரைப் பார்க்கலாம் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணி மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகியவற்றில் டோனியுடன் இணைந்து விளையாடிவரும் ஹர்பஜன் சிங். ரசிகரொருவர் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ஹர்பஜன் சிங். அவர் மேலும் தெரிவித்ததாவது: நீங்கள் இந்தியாவுக்காக டோனி விளையாடுவாரா மாட்டாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள், அவர் இனி இந்தியாவுக்காகவிளையாடமாட்டார்என்றேநான் கருதுகிறேன். இந்தியாவுக்காக விளையாட விரும்பவும் மாட்டார். இந்திய அணிக்காக அவரது கடைசி ஆட்டம் கடந்த வருடம் இடம்பெற்ற உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதிதான். இனி நீல ஜெர்சியில் டோனி வரமாட்டார். ஆனால் சென்னை சுப்பர் கிங்ஸுக்காகச் சில ஆண்டுகள் விளையாடுவார் - என்றார். (ம)




## ஐ.பி.எல் நடக்கும்

### மக்கலம் நம்பிக்கை

புதுடெல்லி, ஏப். 25
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ரி20 உலகக்கிண்ணத் தொடர் பிற்போடப்படும். இதனால் ஐ.பி.எல் தொடர் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் ஐ.பி.எல் அணிகளில் ஒன்றான கொல்கத்தா நைட் ரைடர்ஸின் தலைமைப் பயிற்சியாளருமான மக்கலம்.
இது தொடர்பில் மக்கலம் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.பி.எல் தொடரை எப்படியும் ஒக்டோபர் மாதம் நடத்த முயற்சி செய்வார்கள். அதனால் ரி/20 உலகக் கிண்ணம் அடுத்த வருடத்துக்குப் பிற்போடப்படும். ஆஸ்திரேலியா 16 சர்வதேச அணிகளையும், பணியாளர்களையும், ஒளிபரப்பு செய்பவர்களையும் ஒன்றிணைக்கும் பாலமாக இருக்கப் போகிறது.
2021ஆம் ஆண்டு ஜனவரிக்கு பிறகு போட்டிகளை நடத்த அதிகமான வாய்ப்புகள் உள்ளன. இதனால் ஐ.பி.எல் தொடருக்கான வாய்ப்பை ஒக்டோபர் நவம்பரில் ஏற்படுத்த முடியும். சில வெளிநாட்டு வீரர்கள் இந்தியா செல்ல முடியும். ஒளிபரப்பு செய்யும் நிறுவனம் இந்தியாவில்தான் உள்ளது. இதனால் ஒருங்கிணைக்க எளிதாக இருக்கும் - என்றார். (ம)

## கெய்ல் மாற்றம்



ட்ரினிடாட், ஏப். 25
கரீபியன் பிரீமியர் லீக் அணியான ஜமைக்கா தல்லாவாஸ் கிறிஸ் கெய்லைத் தக்கவைக்க விரும்பாததால் அவர் வேறு அணிக்கு மாறவுள்ளார்.
ரி20 கிரிக்கெட் அணியின் யுனிவர்சல் பொஸ் என்று அழைக்கப்படும் கிறிஸ் கெய்ல் கரீபியன் பிரிமீயர் லீக் தொடரில் ஜமைக்கா தல்லாவாஸ் அணிக்காகமுதல்நான்கு சீசனில்விளையாடினார். அதன்பின் செயின்ட் கிட்ஸ் அண்ட் நேவிஸ் அணிக்கு மாறினார். இரண்டு ஆண்டுகள் அந்தஅணிக்காகவிளையாடினார்.
கடந்த சீசனில் மீண்டும் ஜமைக்கா தல்லாவாஸ் அணிக்கு திரும்பினர். தற்போது ஜமைக்கா அணி 2020 சீசனில் அவரை தக்க வைக்க விரும்பவில்லை. அவரை விடுவித்துள்ளது. இதனால் செயிட் லூசியா சவுக்ஸ் அணி அவரை வாங்கியுள்ளது. ஐபிஎல் அணியான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்கள் செயிட் லூசியா சவுக்ஸ் அணியை வாங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐ.பி.எல் தொடரில்

# சிறந்த தலைவராக தெரிவானார் டோனி

**புதுடெல்லி, ஏப்ரல் 25**
**அனைத்து ஐ.பி.எல் தொடர்களிலும் சிறந்த தலைவராக சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவர் டோனி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.**

பிரபல கிரிக்கெட் இணையத்தளமொன்று அண்மையில் இது தொடர்பான வேறொரு வாக்கெடுப்பை நடத்தியதில் டோனியும், ரோகித் சர்மாவும் இணைந்து சிறந்த தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிலையில் ஐ.பி.எல் தொடருக்கு இணை அனுசரணை வழங்கிய நிறுவனமொன்று கிரிக்கெட் பிரபலங்களை வைத்து இது தொடர்பான தெரிவொன்றை நடத்தியது. ஆஷிஷ் நெஹ்ரா, கிரேம் ஸ்மித், சஞ்சய் மஞ்சுரேக்கர், டேரன் கங்கா, ஸ்காட் ஸ்டைரிஸ், மைக் ஹெசன், டீன் ஜோன்ஸ், ரஸல் ஆனல்ட், சைமன் டூல் ஆகியோர் அங்கம் வகிக்கும் இந்தத் தெரிவுக்குழு டோனியே சிறந்த தலைவர் என்று அறிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் தெரிவுக் குழு அறிவித்துள்ளதாவது:
ரோகித் சர்மா அதிகபட்சமாக 4 கிண்ணங்களை வென்றுள்ளார். டோனி 3 கிண்ணங்களைத்தான் வென்றுள்ளார். கிண்ணங்கள் மட்டும் தலைமைத்துவத்துக்குப் போதுமானதல்ல. நூறு ஆட்டங்களில் விளையாடினால் 60 ஆட்டங்களில் டோனி அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்கின்றார். அத்துடன் 4 ஆயிரம் ஓட்டங்களை 42 என்ற சராசரியில் பெற்றுள்ளார். சென்னைசுப்பர்கிங்ஸை எட்டுத் தடவைகள் இறுதியாட்டத்துக்கு டோனி அழைத்துச் சென்றுள்ளார். அனைத்துத் தொடர்களிலும் பிளேஒவ் சுற்றுக்கு சென்னை சென்றுள்ளது. இவை அனைத்தையும் வைத்துத்தான் டோனியை சிறந்த தலைவராகத் தெரிவுசெய்துள்ளோம் - என்றுள்ளது. (ம)




# கொரோனா எதிர்ப்பு நடவடிக்கை: பேல் 15 கோடி ரூபா நிதியுதவி!

வேல்ஸின் பிரபல கால்பந்தாட்ட வீரரான கரித் பேல், அந்த நாட்டில் கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை மதிப்பில் சுமார் 15 கோடி ரூபாவை வழங்கியுள்ளார்.
வேல்ஸில் சுமார் 7 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 700 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்தே கொரோனாவுக்கு எதிராகப் போராடும் வேல்ஸின் யுனிவர்சிற்றி மருத்துவமனைக்கு இந்தத் தொகையை வழங்கியுள்ளார் பேல்.
'கொரோனா உலகின் பொது எதிரி. அந்த அரக்கனுக்கு எதிராக நாம் ஓரணியில் நிற்க வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார். (ம)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2020 இல் வெளியிடப்பெற்றது.